REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மே 2 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 104 | Thursday 02, May, 2024 | 16பக்கங்கள் | 50/-






# IMF உடனான ஒப்பந்த வெற்றிக்கு ஒத்துழைக்கவும்



## சகல கட்சிகளுக்கும் ஜனாதிபதி ரணில் அழைப்பு

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை வெற்றியடையச் செய்து நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்க அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்து இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

பாரம்பரிய அரசியலைக் கையாண்டு சர்வதேச நாணய நிதியத்தியத்துடனான வேலைத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை

06



# SLPP ஆதரிக்கும் வேட்பாளரே ஜனாதிபதியாக தெரிவாவார்

## மே தினத்தில் மாத்திரமே சில கட்சிகள் தொழிலாளர்கள் பற்றி பேசுகின்றன

லோரன்ஸ் செல்வநாயகம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் ஆதரவுடனான வேட்பாளர் வெற்றி பெறுவது உறுதியெனா, பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். தைத்து வைத்துள்ள கோட், சூட்டை

06



# பெருந்தோட்டத் தொழிலாளர் நாளாந்த சம்பளம் 1,700 ரூபா

## கொட்டகலை CWC மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி அறிவிப்பு

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை தாம் ஒருபோதும் மறக்கவில்லை எனவும், ஜனாதிபதி என்ற வகையில் எதிர்காலத்தில் அவர்களின் உரிமைகளை தாம் உறுதிப்படுத்துவதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கொட்டகலை பொது மைதானத்தில் நேற்று (01)

06



# 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்

## ஐ.ம.ச மே தினக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் சிங்களவரல்லாத ஏனைய மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு வழங்கப்படும் என்றும், அதற்காக 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஏனைய அரசியல்வாதிகளைப் போன்று தாம், வாக்குறுதிகளை மீறவில்லை என்றும் நாட்டின் 76 வருடகால ஜனநாயக வரலாற்றில் எதிர்க்

06



# மே, 20க்கு முன்னர் SJB, விவாதத்துக்கு வர வேண்டும்

## மே தின உரையில் அனுர சவால்

ஊழல் ஆட்சியாளர்களின் கீழ் தேசிய மக்கள் சக்தி நடத்தும் இறுதி மே தினப் பேரணியே இதுவென, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற தொழிலாளர் தினத்தில் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது;

மேலும் கருத்து தெரிவித்த அனுரகுமார திஸாநாயக்க, "ஐக்கிய மக்கள் சக்தியினர் விவாதத்திற்கு அழைத்தனர்.

06

## UNP, SLPP, CWC கட்சிகளின்

# மே தின கூட்டங்களில் அதிகளவு மக்கள் பங்கேற்பு

ஏனைய கட்சிகளின் கூட்டங்களில் கலந்து கொண்டோரைவிடவும் ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன பெரமுன மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பேரணிகளில் கலந்துகொண்ட மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன கூட்டங்களில் மக்கள் திரளாகக் கூடியிருந்தமை தெளிவாகத் தெரிந்தது.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனி ஒரு நபராக பெருமளவான மக்களை நம்பி ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் நடத்தப்பட்ட மே தினக் கூட்டங்களில் கலந்துகொண்டோர்,

06

# தேர்தலை வெற்றிகொள்ள விரிவான வேலைத்திட்டம்

## சுதந்திரக் கட்சியின் மே தினக்கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



லோரன்ஸ் செல்வநாயகம்

எதிர்வரும் தேர்தலை வெற்றிகொள்ள விரிவான வேலைத்திட்டத்தை தயாரித்து வருவதாக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எவரும் எவருடனும் இணைய முடியும். எனினும், கட்சியை அவ்வாறு இணைப்பதற்கு

06



# நகர்வலம்



## விபத்தில் சிக்கிய வயோதிபர் பலி

பதுளை நகரில் துவிச்சக்கர வண்டிகள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளானதில் தலைப்பகுதியில் பலத்த காயத்திற்குள்ளான குடும்பஸ்தரொருவர் பதுளை போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (30) உயிரிழந்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி பதுளை ரயில்வே நிலைய வீதி பாலம் சந்தி வளாகத்தில் நிகழ்ந்த இவ் விபத்தில் பதுளை மைலகஸ் தென்னயைச் சேர்ந்த உபகரண திருத்துனரான முஹம்மட் நஸார் (68வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அன்னாரின் ஜனாஸா பதுளை அன்வர் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## பாடசாலை மாணவன் விபத்தில் காயம்

**புத்தளம் தினகரன் நிருபர்**

கற்பிட்டி பள்ளிவாசல் துறையில் பாடசாலை மாணவன் ஒருவன் விபத்தில் காயமடைந்துள்ளார்.

கற்பிட்டி பள்ளிவாசல்துறை முசல்பிட்டிக்கான பிரதான வீதியில் (30) பாடசாலை முடிந்து வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்த ஐந்தாம் ஆண்டு மாணவன் மீது மோட்டர் சைக்கிள் மோதியதில் மாணவன் காயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து பற்றிய மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாத்தளை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திக்கு ரூ. 400 இலட்சம் நிதி

### சுகாதார அமைச்சருக்கு இராஜாங்க அமைச்சர் ரோஹன நன்றி

**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

மாத்தளை மாவட்ட வைத்தியசாலையில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு 400 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதி உதவியை சுகாதார அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளதாக விளையாட்டு துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க (30) தெரிவித்தார்.

இந்நிதியை கொண்டு வைத்தியசாலையில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கிணங்க எக்ஸ்ரே அறை, மகப்பேற்று பெண் நோயியல் சத்திர சிகிச்சை நிலையம் சத்திர சிகிச்சை அறையின் குளிரூட்டும் வசதியை மேம்படுத்தல் மற்றும் கட்டட திருத்தப் பணிகள் உட்பட பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு இந்நிதி செலவிடப்படவுள்ளது.



இதன் மூலம் நவீன வசதிகளுடன் இவ் வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்பட்டு சிறந்த சுகாதார சேவையை மக்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும். வைத்தியசாலையில் நீண்ட காலமாக நிலவி வரும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய சுகாதார அமைச்சிடம் நாம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க துரித கதியில் இதனை நிவர்த்தி செய்ய முன்னின்று செயற்பட்ட சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரணவுக்கும் இதற்கு பங்களிப்பு செய்த வைத்தியசாலை நிர்வாகம், அபிவிருத்திக் குழுவினருக்கும் தனது நன்றியை தெரிவித்து கொள்வதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ரதுபஸ்வெல வழக்கு மீதான தீர்ப்பு மே 17ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கம்பஹா ரதுபஸ்வெல வழக்கின் தீர்ப்பை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு கம்பஹா மேல் நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

ரதுபஸ்வெல பிரதேசத்தில் சுத்தமான குடி நீருக்காகப் போராட்டம் நடத்திய பிரதேசவாசிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழந்ததுடன் மேலும் பலர் காயங்களுக்கு உள்ளாகினர். அந்த சம்பவம் தொடர்பில் இராணுவ பிரிகேடியர் மற்றும் மூன்று இராணுவத்தினருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பையே நீதிமன்றம் இம்மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் கம்பஹா மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கின் தீர்ப்பு வெளியிடப்படவிருந்த நிலையில் நேற்று முன்தினம் இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெலிகம ஹப்ஸா அரபுக்கல்லூரி தீ விபத்தை பார்வையிட ஹக்கீம் விஜயம்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெலிகம ஹப்ஸா மகளிர் அரபுக் கல்லூரி விடுதி கட்டடத்தில் அண்மையில் ஏற்பட்ட தீப்பரவல் பற்றிய தெளிவை பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் வெலிகமைக்கு (29) விஜயம் செய்திருந்தார்.

அச் சமயம் ஹப்ஸா மகளிர் அரபுக் கல்லூரி பணிப்பாளர் அஷ்ஷேக் எம்.ஓ.பத்ஹுர்ரஹ்மான் (பஹ்ஜி) மற்றும் விரிவுரையாளர் அஷ்ஷேக் எம்.ஏ.ஏ.எம். ளபர் (பஹ்ஜி) உட்பட பலருடன் ரவூப் ஹக்கீம் கலந்துரையாடி தகவல்களை பெற்றுக் கொண்டார்.



இது விடயமாக தென் மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் அப்பகுதி பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் கதைத்து உரிய நடவடிக்கைகளை மேற் கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் இதன்போது தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளையும் அவர் பார்வையிட்டார்.

## சவூதி அரேபியாவில் நடைபெற்றுமுடிந்த உலகப்பொருளாதார மன்ற சிறப்புக் கூட்டம்

### நல்ல மாற்றங்கள் நிகழ ஷபாப் பிரார்த்தனை




ஜெனீவா நகரை மையமாகக் கொண்டு உலகப் பொருளாதார மன்றத்தின் சிறப்புக் கூட்டம் முதல் தடவையாக சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் கடந்த 28ஆம், 29ஆம் திகதிகள் நடைபெற்று முடிந்தன.

இக்கூட்டத்தின் மூலம் உலகப் பொருளாதாரத்தில் நல்ல மாற்றங்கள் நிகழ பிரார்த்திப்போம் என அ.இ. ஜ.உலமாவின் உதவிப் பொதுச் செயலாளரும், ஷபாப் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருமான மௌலவி எம்.எஸ்.எம். தாஸீம் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வின் போது வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் சவூதி அரேபியாவின் முதலீட்டு அமைச்சர் காலித் ஆகியோர் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இது இரு நாடுகளிலும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு பெரிதும் உதவுவதாகவும் அமையும் என தெரிவித்துள்ள மௌலவி தாஸீம், நடைபெற்று முடிந்த இம்மாநாட்டில் உலகின் பல நாடுகளிகளின் தலைவர்கள், சிந்தனையாளர்கள் மற்றும் துறை சார்ந்தவர்கள் பங்கேற்று ஆக்கபூர்வமான பல தலைப்புகளில் கலந்துரையாடல்களை மேற்கொண்டமை விசேட அம்சமாகும்.

சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும், பிரதமருமான முஹம்மது பின் சல்மானின் முயற்சியின் மூலம் இம்மன்றம் 50 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்தின் பின் ரியாத் நகரில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பொதுஜன பெரமுனவின் மே தின நிகழ்வு













தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மே 2 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN


தொழுகை நேரம்

சுபஹ் - 04.39
லுஹர் - 12.09
அஸர் - 03.26
மஃரிப் - 06.19
இஷா - 07.31

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் சித்திரை 19

ராகுகாலம் : பகல் : 1.27 - 2.57 வரை
சுபநேரம் : காலை : 7.27 - 8.57 வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கு இம் மாத இறுதிக்குள் காணி உரிமை



## அமைச்சர் ஜீவன் தொண்டமான்

எமது பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இன்று நிலஉரிமையற்ற சமூகமாக இருக்கிறார்கள்.

இம்மாத இறுதிக்குள் எமது மக்களுக்கு காணி உரிமை நிச்சயம் கிடைக்குமென, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேற்று தெரிவித்தார்.

கொட்டகலை பொது மைதானத்தில் நேற்று (01) முற்பகல் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எனது தந்தை ஆறுமுகன் தொண்டமான் மறைந்த பின்னர் எம்மால் மேதினக் கூட்டம் நடத்த முடியாமல் போனது. கொரோனா தொற்று, பொருளாதார நெருக்கடி என்பவற்றை எதிர்கொள்ளநேரிட்டது. இ.தொ.கா முடிந்துவிட்டதா? என சிலர் கேள்வி எழுப்பத் தொடங்கினர். 04 வருடங்களின் பின்னர் பாரிய மேதின கூட்டமொன்றை இன்று நடத்துகிறோம். தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பள அதிகரிப்பையும் பெற்றுக் கொடுப்பதாக உறுதியளித்திருந்தோம்.


அந்த வாக்குறுதியை இன்று நிறைவேற்றியிருக்கிறோம். கடந்த 04 வருடங்களாக பல்வேறு அவமானங்களையும் பிரச்சினைகளையும் சந்தித்திருக்கிறோம். எமது மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

நில உரிமையற்ற சமூகமாக இன்று எமது மக்கள் இருக்கின்றனர். இம்மாத இறுதிக்குள் எமது மக்களுக்கு நிலஉரிமைக்கான காணி உரிமை நிச்சயம் கிடைக்குமென்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

சிபெற்கோ, ஐஓசி, சினொபெக்

# எரிபொருட்களின் விலைகள் 30 நள்ளிரவு முதல் குறைப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருட்களின் விலைகளை குறைத்துள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 03 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 368 ரூபாவாகும்.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 420 ரூபாவாகும்.

ஒரு லீற்றர் டீசலின் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 333 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 09 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 377 ரூபாவாகி உள்ளது .

இந்த விலை குறைப்பின் படி மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 215 ரூபா என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

லங்கா ஐஓசி நிறுவனமும் தமது எரிபொருள் விலைகளையும் குறைத்துள்ளது. சிபெட்கோ எரிபொருள் விலைத் திருத்தத்துக்கு அமைவாக லங்கா ஐஓசி நிறுவனமும் தமது எரிபொருள் விலையை குறைத்துள்ளது.

அதேவேளை, சினோபெக் நிறுவனமும் எரிபொருள் விலைகளில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுதாபனம் மற்றும் லங்கா ஐஓசி நிறுவனங்களின் விலைகளுக்கேற்ப திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# பஸ் கட்டணத்தில் மாற்றமில்லை

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கம் டீசலின் விலையை குறைத்துள்ள போதும், பஸ் கட்டணத்தை குறைக்க முடியாதுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

பஸ் கட்டணங்கள் தொடர்பான தேசிய கொள்கையின் விலைச் சூத்திரத்தின் அடிப்படையிலேயே, கடந்த வருடம் ஜூலை மாதத்தில் வருடாந்த பஸ் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வருடத்துக்கான பஸ் கட்டணத்தை எதிர்வரும் ஜூலை மாதத்திலேயே தீர்மானிக்க முடியும். இப்போதைக்கு டீசல் விலை குறைந்துள்ள காரணத்துக்காக பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.





முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 31 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு கொழும்பு ஹல்ஸ்டொப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு முன்னால், நேற்று விசேட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திருமதி ஹேமா பிரேமதாச, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, துலாஞ்சலி பிரேமதாச ஆகியோர் அன்னாரின் உருவச்சிலைக்கு மலர்ச் செண்டு வைத்து அஞ்சலி செலுத்தியபோது பிடிக்கப்பட்ட படம்.

# ஸ்ரீல.சு.க ஜனாதிபதி வேட்பாளர் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச

## மைத்திரிபால சிறிசேன உறுதியாகத் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்சவே போட்டியிடவுள்ளதாக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பதவிக்கு தாம், மீண்டும் போட்டியிடப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்சவுக்கு பெரும்பாலான கட்சிகளது உறுப்பினர்களின் ஆதரவு உள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற முன்னாள் அமைச்சர் அமரர் டி.பி. இலங்கரத்னவின் நினைவுதின

06

அஸ்வெசும நலன்புரி திட்டம்

# போலி தகவல்கள் வழங்குவோரின் கொடுப்பனவை நிறுத்த தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில், போலி ஆவணங்களை சமர்ப்பிப்போர் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவ்வாறானவர்களை இனம் காண்பதற்காக விசேட வேலைத் திட்டம் நடைமுறைப்படுத் தவுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவிக்கின்றது.

அந்த வகையில் போலியான தகவல்களை வழங்கி அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுள்ளவர்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டு அவர்களுக்கான கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்படும் என்றும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நலன்புரி நன்மைகள் சபையின் அதிகாரியொருவர் தெரிவிக்கையில்:

போலியான தகவல்களை வழங்கி அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வோர் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. அவ்வாறானவர்களை கண்டுபிடிப்பதற்காக விசேட வேலைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அரசாங்கம் சுற்று நிருபத்தை அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

அந்த வகையில் போலியான தகவல்களை சமர்ப்பித்து அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வது உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களின் கொடுப்பனவுகள் இடை நிறுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சியில் சிறப்பாக நடைபெற்ற மே தின நிகழ்வு



தமிழ்த் தேசிய மே தின நிகழ்வு இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது.

மே தின பேரணியை பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து கொடியசைத்து ஆரம்பித்து வைத்தனர்.

பறை இசையுடன் கிளிநொச்சி பிள்ளையார் ஆலயம் முன்பாக ஆரம்பமான பேரணி, மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம் வரை சென்றடைந்து உயிரிழந்த மக்களின் நினைவாக மேடையில் பறை இசைக்கப்பட்டது. பின்னர் மேதின சுடர்களை தொழிற்சங்க பிரதிநிதிகள் ஏற்றி வைத்தனர். இதையடுத்து அஞ்சலி நினைவுகள் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து தொழிலாளர் தின நிகழ்வுகளும், உரைகளும் நடைபெற்றன. நிகழ்வில் சமயத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான மனோகணேசன், எஸ். சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சரவணபவன், சிவமோகன் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.




தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 19ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 23

### குறள் தரும் சிந்தனை



குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

*தம் மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு அதன் இனிமையை நுகராதவரே குழலின் இசை இனியது யாழின் இசை இனியது என்று கூறுவர்.*

## பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேண்டுகோள் நிறைவேறிய தினம்!

உலக தொழிலாளர் தினமான மேதினம் நேற்று இலங்கையில் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நாடெங்கிலும் 40 மேதினக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட பிரதான அரசியல் கட்சிகள் அடங்கலாக 14 கட்சிகள், தொழிற்சங்கங்கள் கொழும்பில் மேதினக் கூட்டங்களை ஏற்பாடு செய்து நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை மேதினக்கூட்டங்களில் தொழிலாளர்கள் மிகுந்த ஆரவாரத்துடனும் சிரத்தையுடனும் கலந்து கொண்டதைப் பரவலாக அவதானிக்க முடிந்தது. அதேநேரம் இந்நாட்டின் இம்முறை மேதினம் வரலாற்று முக்கியத்துவம் பெற்றதாக இடம்பிடித்துள்ளது. குறிப்பாக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் நேற்று முதல் ரூபா 1700 ஆக அதிகரிக்கப்படும் வகையில் விஷேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கொட்டகலையில் ஏற்பாடு செய்திருந்த மேதினக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இந்நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை உறுதிப்படுத்தும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் வாழ்க்கைச் செலவு என்பவற்றின் பின்புலத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது நாளாந்த சம்பளத்தை ரூ. 1700 ஆக அதிகரிக்கும்படி கோரிக்கை விடுத்து வந்தனர். இதனை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை மாத்திரமல்லாமல் ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் முன்னெடுத்து வந்தனர்.

அதேநேரம் தொழிலாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களும் முதலாளிமார் சம்மேளனத்துடன் பல தடவைகள் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டன. தொழிலமைச்சரும் கூட பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து பேச்சுக்களை மேற்கொண்டார். இருந்த போதிலும் தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதில் முதலாளிமார் சம்மேளனம் அக்கறை காட்டாத நிலை நீடித்து வந்தது.

இந்நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் முக்கிய துறைகளில் ஒன்றாக விளங்கும் பெருந்தோட்டத் துறையில் இத்தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கள் இதன் நிமித்தம் அர்ப்பணிப்புக்களோடு வியர்வை சிந்தி உழைத்து வருகின்றனர்.

அந்தத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கை நியாயக்கண் கொண்டு நோக்கப்பட வேண்டும். அதுவே நடுநிலைப் பார்வை கொண்டவர்களின் கருத்தாகும்.

கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. அதனால் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களதும் விலைகள் பெரிதும் அதிகரித்தன. அதன் விளைவான நெருக்கடியின் தாக்கங்களுக்கும் பாதிப்புக்களுக்கும் எல்லா மக்களும் முகம்கொடுத்தார்கள். அவர்களில் பெருந்தோட்டத் தொழிலாளர்களும் அடங்கி இருந்தனர். நாட்டின் பெரும்பான்மை மக்களைப் போன்று பெருந்தோட்ட மக்களும் அந்தப் பொருளாதார நெருக்கடிக்கு முன்பாக பொறுமை காத்தார்கள்.

இவ்வாறான சூழலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துவரும் மேம்பாட்டு திட்டங்களின் ஊடாக நாடு பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்சி பெற்று முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. அதன் பிரதிபலன்கள் நாட்டு மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டும் வருகின்றன.

இந்நிலையில்தான் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாளாந்த சம்பளத்தை ரூ. 1700.00 ஆக அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். தற்போதைய சூழலில் இது நியாயமான கோரிக்கை என்றே அனைத்து தரப்பினரும் குறிப்பிட்டுள்ளனர்.

அதேநேரம் இத்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றமடைந்ததாக இல்லை. குறிப்பாக இந்நாட்டின் ஏனைய சமூகங்களை விடவும் பின்தங்கியதாகவே அவர்களது வாழ்க்கை காணப்படுகிறது. அவர்களில் குறிப்பிடத்தக்க அளவிலானோருக்கு காணி உரிமை கூட இன்னும் இல்லை. அதனால் அவர்கள் தோட்டங்களில் அமைந்திருக்கும் தோட்ட லயன் அறைகளில்தான் தங்கியுள்ளனர்.

இருந்தும் கூட முதலாளிமார் சம்மேளனத்தினர் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையை நியாயக் கண்கொண்டு பார்க்கத் தவறினர்.

இதன் விளைவாகவே நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ரூ. 1700 ஆக அதிகரிக்கும் வகையில் விஷேட வர்த்தமானி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனை பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். அவர்கள் மத்தியில் புதிய எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் இந்த வர்த்தமானி நிச்சயம் ஏற்படுத்தும். இதனை உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# காரைதீவு, அவுஸ்திரேலியா மக்கள் ஒன்றியம் ஏற்பாட்டில் சிட்னியில் சித்திரைப் பெருவிழா

காரைதீவு, அவுஸ்திரேலியா மக்கள் ஒன்றியம் (AusKar) தமிழர் பாரம்பரியத்தைப் பேணும் நோக்குடன் நடத்திய சித்திரைத் திருநாள் பெருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிட்னி லிட்டன் ஸ்ட்ரீட் பார்க் மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஒஸ்கார் அமைப்பின் நடப்பாண்டுத் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமையில் விழா நடைபெற்றது. அதிதிகளாக ஒஸ்கார் அமைப்பின் போசகர்களான சிட்னியில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை நிறுவிய உதயசூரியன் நாகமணி குணரெட்ணம், முன்னாள் பட்டயக் கணக்காளர் ரி. பிரகதீஸ்வரன், முன்னாள் பொறியியலாளர் எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்த நிகழ்வில் அவுஸ்திரேலியாவில் வாழும் காரைதீவு மக்கள் அனைவரும் பங்குபற்றினார்கள்.

நான்கு மணி நேரமாக கோலாகலமாக நடைபெற்ற அந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டு, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டதாக ஒஸ்கார் செயலாளர் திருச்செல்வம் லாவண்யன் தெரிவித்தார்.







**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

# அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்களுக்கு Ceri நிறுவனம் பரிசு வழங்கி கௌரவிப்பு

கல்முனை பிரதேசத்தில் மோசமான போஷாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை கண்காணித்து, அவர்களின் சுகாதார மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் பாராட்டி, பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

செரி (Ceri) சர்வதேச தொண்டு நிறுவனம் கல்முனை பிரதேசத்தில் மோசமான போஷாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவும் பொருட்டு கடந்த 6மாதங்களாக பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தது.

இப்பிரதேசத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் முன்னெடுக்கப்பட்ட குறித்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பொதுச்சுகாதார தாதிய உத்தியோகத்தர்கள், மேற்பார்வை பொதுச்சுகாதார மருத்துவமாதுக்கள், பொதுச்சுகாதார மருத்துவமாதுக்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினர்.

அவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் பொருட்டு பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு ஏற்பாடு செய்த சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது. பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.றிஸ்பின் அவர்களினால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட இந்நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சி.எம்.மாஹிர், பிராந்திய தொற்றுநோய் தடுப்புப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சி.எம்.பசால், கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சம்மாந்துறை, சாய்ந்தமருது, காரைதீவு, நாவிதன்வெளி, நிந்தவூர் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள், Ceri நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.





மேற்குறித்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கடமையாற்றும் பொதுச்சுகாதார தாதிய உத்தியோகத்தர்கள், மேற்பார்வை பொதுச்சுகாதார மருத்துவமாதுக்கள், பொதுச்சுகாதார மருத்துவ மாதுக்கள் இதன் போது பாராட்டி பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பெண்களுக்கான நலன் கிளினிக்கில் மிகத்திறமையாக செயல்பட்டு முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்ட நாவிதன் வெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கும் இந்நிகழ்வின்போது விருது வழங்கப்பட்டது.

கல்முனை சுகாதார பிராந்தியத்தில் அதிதீவிர போஷாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் சுகாதார நலன் கருதி பல்வேறு கிளினிக், போஷாக்கு உணவுப் பொருட்கள் வழங்கல் மற்றும் உதவித் தொகைகளையும் வழங்கி Ceri சர்வதேச தொண்டு நிறுவனம் பெரும் பணியாற்றியுள்ளது. 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 325 ஆகக்காணப்பட்ட அதிதீவிர போசாக்கு குறைபாடு உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை தற்போது 129 ஆகக் குறைந்துள்ளது.

**அஷ்ரப் கான்...**
(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

# டில்லி உட்பட இந்தியாவில் 60 இற்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு குண்டுத்தாக்குதல் மிரட்டல்!



இந்தியத் தலைநகர் டில்லி மற்றும் நொய்டாவில் 60 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு நேற்றுமுன்தினம் மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இதனையடுத்து மாணவர்கள் அவசரம் அவசரமாக வெளியேற்றப்பட்டனர். பொலிசார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.



டில்லியின் சாணக்யாபுரியில் உள்ள சான்ஸ்கிரிதி பாடசாலை, கிழக்கு டில்லியின் மயூர் விஹார் பகுதியில் உள்ள மதர் மேரி பாடசாலை மற்றும் துவாரகா பகுதியில் உள்ள டில்லி பப்ளிக் பாடசாலைக்கு மின்னஞ்சல் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டது. இது குறித்து பாடசாலை நிர்வாகம் சார்பில் பொலிசாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து டில்லி மற்றும் நொய்டாவில் உள்ள ஏராளமான பாடசாலைகளும், தங்களுக்கும் இதேபோன்று மிரட்டல் வந்ததாக பொலிசில் புகார் அளித்தன. இதுவரை 60 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து வெடிகுண்டு தடுப்புப் பிரிவினர், வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவினர், தீயணைப்புத்துறையினர் மற்றும் பொலிசார் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு விரைந்து, வெடிகுண்டை தேடினர்.

பொலிசார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட போதிலும் சந்தேகப்படும்படியாக எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

மதர் மேரி என்ற பாடசாலையில் மாணவர்களுக்கு தேர்வு நடந்தது. மின்னஞ்சல் மூலம் மிரட்டல் வந்ததைத் தொடர்ந்து, தேர்வை பாதியில் நிறுத்திவிட்டு அவசரம் அவசரமாக மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர். ஊழியர்களும் பாடசாலை வளாகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். பெற்றோரை வரவழைத்த பாடசாலை நிர்வாகம், குழந்தைகளை அவர்களுடன் அனுப்பி வைத்தது.

## ரியாத் நகரில் உலகப் பொருளாதார மன்றம்;
# சவூதி அரசியல் பிரமுகர்களுடன் அமைச்சர் அலி சப்ரி சந்திப்பு

சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் ஏப்ரல் 28, 29ஆம் திகதிகளில் சவூதியின் பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஆதரவில் நடைபெற்ற உலக பொருளாதார மன்றத்தின் (WEF) சிறப்புக் கூட்டம், அதிகரித்து வரும் எல்லை தாண்டிய சவால்களை எதிர்கொள்வதற்கான ஸ்திரத்தன்மை, செழிப்பு மற்றும் வளர்ச்சியினை உள்ளடக்கிய வாய்ப்புகளுக்கான தெளிவான பாதைகளை அமைத்து வெற்றிகரமாக முடிவுற்றது.

'உலகளாவிய ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான ஆற்றல்' என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்ற இம் மன்றத்தில் முன்னணி அரசியல், பொருளாதார மற்றும் முக்கிய தொழில்நுட்ப பிரமுகர்கள் உள்ளடங்களாக 1,000 இற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

இலங்கை சார்பாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இச்சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அவர் சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் பைசல் பின் பர்ஹான் உட்பட பல அரசியல் பிரமுகர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த நிகழ்வின் போது அமைச்சர் அலி சப்ரி மற்றும் சவூதி அரேபியாவின் முதலீட்டு அமைச்சர் காலித் அல் பலிஹ் ஆகியோர் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த மற்றும் பின்தங்கிய நிலையிலுள்ள நாடுகள் தொடர்பாக சவூதி ஏற்பாடு செய்த கலந்துரையாடலில் இலங்கை பங்கேற்பதாகவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை நிறுவனத்துடன் மூன்று முக்கிய ஒப்பந்தங்களை சவூதி மேற்கொண்டுள்ளது. பல நாடுகளில் சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் போலியோவை தடுக்கும் நோக்கத்துடன், மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம் (KSrelief) மற்றும் சவூதியின் சுகாதார அமைச்சகம் ஆகியவை இணைந்து இவ்வொப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சவூதியின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் அமைச்சர் பைசல் அலி இப்ராஹிம் கருத்துத் தெரிவிக்கையில், உலகம் வாய்ப்புகள் மற்றும் பொறுப்புக்களுக்கு மத்தியிலான தடுமாற்ற நிலையில் உள்ளது என்றும், ஒவ்வொரு நாடும் அதன் செல்வம் அல்லது அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் உலகளாவிய பொருளாதாரத்தை செழிப்பானதாக உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கும் ஆற்றல் மாற்றத்தை ஆதரிப்பதற்குமான மூன்று முன்முயற்சிகளும் தொடங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.





உலகளாவிய ஒத்துழைப்பு மேம்படுத்தல் தொடர்பான அதிகமான கலந்துரையாடல்கள் மற்றும் அமர்வுகள் இந்நிகழ்வில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. சவூதி வெளிவிவகார அமைச்சர் இளவரசர் பைசல் பின் பர்ஹான் அல் சௌத் தலையமையில் இவ்வமர்வுகள் இடம்பெற்றதோடு, மத்திய கிழக்கு, ஆப்பிரிக்கா மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் விரிவடைந்து வரும் மோதல்கள் உட்பட மிக முக்கியமான புவிசார் அரசியல் சவால்களை சமாளிப்பதற்கான ஒத்துழைப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் முக்கிய இடம்வகித்தது. இதே தலைப்பில் உரையாற்றிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஆதெல் அல் ஜுபைர், நிலையான பிராந்திய ஸ்திரத்தன்மையை அடைய தெளிவான பாதையைக் கண்டறிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் பல புதிய திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாக மாடர்னா (Moderna) தலைமை நிர்வாக அதிகாரி ஸ்டீபன் பா ன்செல், புற்றுநோய்க்கான முதல் மருத்துவ தயாரிப்பிற்கான பணிகளை 2025 ஆம் ஆண்டாகும் போது தொடங்குவதற்கான நிறுவனத்தின் திட்டங்களை அறிவித்தார்.

**காலித் ரிஸ்வான்...**

# கொட்டகலை இ.தொ.கா மே தின நிகழ்வில் ஜனாதிபதி














இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தொழிலாளர் தினம், கொழும்பு, ராஜகிரியவிலுள்ள சங்கத்தின் தலைமை அலுவலகமான தொழிலாளர் இல்லத்தில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் சங்கத்தின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சங்கத்தின் தலைவர் சாகல ரத்நாயக்கவும் உறுப்பினர் இஷாக் ரஹ்மானும்பெருந்தோட்ட மலையக மக்களும் கொழும்பில் தொழில் புரியும் பெருந்தோட்ட உறவுகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

66 ஆண்டு காலமாக மக்கள் பக்கம் நின்று

# பொதுப் போக்குவரத்தின் மிகப் பாரிய தேசிய பொறுப்பை CTB யே நிறைவேற்றியது




66 ஆண்டு காலமாக பொது மக்கள் பக்கம் நின்று நாட்டின் பொதுப் போக்குவரத்தின் மிகப் பாரிய தேசிய பொறுப்பை இலங்கை போக்குவரத்து சபையே நிறைவேற்றியதாக போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

"கூடுவோம் விருப்புடன் இணைவோம் மனதால்" என்னும் தொனிப்பொருளின் கீழ் இம்முறை கொண்டாடப்படும் தொழிலாளர்களின் மே தின கூட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன ஊழியர் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடு பூராவுமுள்ள அங்கத்தவர்கள் பெருமளவில் கொழும்பு கெம்பல் மைதான பேரணியில் கலந்து கொண்டனர்.

நாரஹேன்பிட்டி ஷாலிகா விளையாட்டரங்கிலிருந்து ஆரம்பமான பேரணியில் இலங்கை போக்குவரத்து சபையின் தலைமை அலுவலகத்துக்கு அருகில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவும் கலந்து கொண்டார்.

சங்கத்தின் தலைவர் நுராஜித் சிங் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்களின் தலைமையில் இலங்கைப் பொதுப் போக்குவரத்து ஊழியர் சங்கத்தினர் பெருமளவானோர் ஒன்றிணைந்திருந்தனர். அங்கு பேசிய அமைச்சர், "இலங்கை போக்குவரத்துச் சபை, பாடசாலை மாணவர்களில் ஆரம்பித்து, எமது நாட்டில் பொதுப் போக்குவரத்தின் மிகப்பெரிய தேசியப் பொறுப்பை நிறைவேற்றி வருகின்றது.

66 வருடங்களாக அவர்கள் மே தின கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளனர். அவர்களின் சேவைகள் இல்லாமல் பொது போக்குவரத்து வசதிகளை வழங்க முடியாது. அவர்கள் இல்லையென்றால் வேலை முடிந்து சரியான நேரத்துக்கு இரவில் வீடு திரும்ப முடியாது. அவர்கள் இந்நாட்டில் அர்ப்பணிப்புடன் செயல்படும் மக்களில் ஒரு பகுதியினராவர்.

பொதுஜன ஐக்கிய தொழிற்சங்கம் இம்முறையும் ஆயிரக்கணக்கான அங்கத்தவர்களுடன் மே தின பேரணியில் இணைந்துள்ளது. அது தொடர்பாக அவர்களுக்கு எமது பாராட்டுக்கள் உரித்தாகட்டுமென்றும் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

## IMF உடனான ஒப்பந்த...

சீர்குலைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, 2022 ஆம் ஆண்டு நாடு இருந்த நிலைமைக்கு நாட்டை மீண்டும் உட்படுத்த இடமளிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

கொழும்பு மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் நேற்று (01) பிற்பகல் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். மீண்டும் வீழ்ச்சியடையாத பெருமைமிகு நாடு' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மே தின கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்த கட்சிகளின் உறுப்பினர்கள் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்திருந்த பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கலந்துகொண்டனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மொனராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கயாஷான் நவநந்தவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்து மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டமையும் விசேட அம்சமாகும்.

## SLPP ஆதரிக்கும் வேட்பாளரே...

அணிவதற்கு எதிர்பார்த்து பல தலைவர்கள் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.இந்த மே தினக் கூட்டம் வரலாற்றில் மிக தீர்க்கமானது என்றும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், நாடு எவ்வாறான பாதையில் பயணிக்கப் போகிறது என்பதற்கான தீர்மானத்தை இன்று முதல் நாம் நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். கொழும்பு பொரளை கெம்பல் பூங்காவில் நேற்று நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும்போதே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன,முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச உட்பட கட்சியின் முக்கிய தலைவர்கள், அமைச்சர்கள் பலரும் கலந்துகொண்ட இந்த கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், அனைத்து அரசியல் மேடைகளிலும் அதன் தலைவர்கள் எம்மீதே சேறு பூசுகின்றனர். எமது தலைவர்களை இலக்காக கொண்டே அந்த சேறு பூசல்கள் இடம்பெறுகின்றன. அது ஏன்? . இன்னும் பொதுஜன பெரமுன விடமே மக்கள் பலம் உள்ளது என்பதை அவர்கள் அறிந்து வைத்துள்ளனர்.இதனாலே எங்களை விமர்சிக்கின்றனர்.

அவர்களின் தேவையெல்லாம் பொது ஜன பெரமுனவின் 69 இலட்சம் வாக்குகளை பகிர்ந்து கொள்வதே. அத்துடன், பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் கட்சி தாவி அவர்களிடம் வரும் வரை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

மக்கள் ஒன்றை சிந்திக்க வேண்டும். வரலாற்றில் அதிக தவறுகளை செய்த, நாட்டின் எதிர்காலத்தை இல்லாதொழித்த தரப்பினரின் கேலிக்கு ஏமாறி அவர்களது மடியில் விழுவதற்கு செல்ல வேண்டாம். எமது தரப்பினரிடம் நான் விடுக்கும் வேண்டுகோள் இதுவே.

எம்மிடம் தவறுகள் காணப்பட்டாலும் எம்மை விட, ஆயிரம் மடங்கு தவறுகள் செய்தவர்களிடம் நாம் செல்லக்கூடாது. தவறுகளை திருத்திக் கொண்டு வெற்றி பெறும் நாட்டுக்காக நாம் ஒருமித்த பயணத்தை முன்னெடுப்பது அவசியம்.

நாட்டுக்கு சேவை செய்வதற்கான பலம் இன்றும் பொதுஜன பெரமுனவிடமே உள்ளது. அதனால் எதிர்வரும் தேர்தலில் எமது கட்சியின் ஆதரவுடனான வேட்பாளரே, வெற்றி பெறுவார்.இதை கிராமத்தில் சென்று தெரிவியுங்கள். தைத்து வைத்துள்ள கோட் சூட்களை உடுத்துவதற்கு சில தலைவர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். தேசியத் தலைவர்கள் பலர், வெளிநாடுகளில் கடன் பெற்று நாட்டை பூஜ்ஜிய பொருளாதார நிலைக்கு கொண்டு வந்தனர். நாமே, நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

ஆட்சியில் இருந்தபோதும் அதிகாரத்தில் இல்லாத போதும், நாட்டின் தொழிலாளர் வர்க்கத்துடனே நாம் இருக்கிறோம்.

கடந்த காலங்களில் வேலைத்தளங்களிலும் சரி, வீதிகளிலும் சரி தொழிலாளர்களின் போராட்டங்களுடன் நாம் இணைந்திருந்தோம். வீதிகளில் ஊர்வலம் போவதற்கு மாத்திரம் நாம் தொழிலாளர்களை பயன்படுத்துவதில்லை. இதைப் பொறுப்புடன் எமக்கு கூற முடியும்.

சிறைக்கு மே தினத்தில் மாத்திரமே தொழிலாளர்கள் ஞாபகத்திற்கு வருகின்றனர்.

நாட்டில் 91 வருடங்களாக தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகிறது. நான், தொழில் அமைச்சராக பதவிக்கு வரும் வரை தொழிலாளர்களுக்காக ஒரு சதமேனும் நிதி ஒதுக்கப்படவில்லை. அதற்கான எந்த முறைமையையும் அரசாங்கங்கள் தயாரிக்கவில்லை. நாம் 'கிராம வாசனா' நிதியம் ஆரம்பித்து தொழிலாளர்களின் நலன்புரி நடவடிக்கைகளை ஆரம்பித்தோம். இன்றைய தொழிலாளர்கள் நாளைய தொழில் முயற்சியாளர்கள். அந்த வகையில் ஓரிரு வருடங்களில் உங்கள் பிள்ளைகளும் அதைவிட, பல படிகள் முன்னேறிச் செல்வர். அவ்வாறு முன்னோக்கிச் செல்வது நீங்கள் மட்டுமல்ல இந்நாடும் அவ்வாறு முன்னோக்கிச் செல்லும். நாடு வெற்றி பெறுவதுடன் நாட்டுக்கு தேவையான சமூக முன்னேற்றமும் உருவாகும்.

வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும்போது நாட்டில் இருந்த ஒவ்வொரு தொழிற்சங்கத் தலைவர்களுடனும் நாம் சிறந்த நட்புறவை கொண்டிருந்தோம். அவர்களுக்கு செவிமடுத்து அவர்கள் முன்வைக்கும் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு பெற்றுக் கொடுத்துள்ளோம். பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே எமது நிலைப்பாடு. அதனால் அவ்வாறான தொடர்புகள் மே தினத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கவில்லை. அந்த வகையில் யார் எதைக் கூறினாலும் இந்த நாட்டின் வேலைத்தளங்களிலும், அனைத்துத் துறைகளிலும் தொழிலாளர்களின் ஆதரவு பொதுஜன பெரமுன கட்சிக்கு மாத்திரமே உள்ளது. இதை துணிவுடன் எம்மால் கூற முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பெருந்தோட்டத் தொழிலாளர்...

முற்பகல் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த நிகழ்வில் இணைந்து கொண்டதுடன், மைதானத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் நாயகம் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் வரவேற்றனர். பெருந்திரளான மக்களின் பங்குபற்றலுடன் மே தினக் கூட்டமும் பேரணியும் நடைபெற்றதுடன் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மிகப்பெரிய தொழிற்சங்கம் மற்றும் அரசியல் கட்சியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காணப்படுகிறது.

மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதிக்கு மலையக மக்களினால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, லயன் அறைகள் சட்டபூர்வமான கிராமங்களாக மாற்றப்படும் அவற்றின் வசதிகள் மேம்படுத்தப்படுமென மேலும் குறிப்பிட்டார். பெருந்தோட்டப் பிள்ளைகளின் கல்வி மற்றும் தொழில்சார் கல்வியை மேம்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த கால பொருளாதார நெருக்கடியின் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட போதிலும் நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கு பெருந்தோட்ட மக்கள் ஆற்றிய பங்களிப்புக்காக ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது: நாங்கள் அனைவரும் மிகவும் கடினமான காலத்தை கடந்து வந்துள்ளோம். இதன் போது பெருந்தோட்ட மக்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டனர் என்பதை நாம் அறிவோம். ஆனால் சிரமங்கள் இருந்தபோதிலும், அவர்கள் தேயிலைக் கொழுந்து பறிப்பதன் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த பங்களித்தனர். 2023 ஆம் ஆண்டிலும் 2024 ஆம் ஆண்டிலும் தேயிலை ஏற்றுமதி மூலம் அதிக அந்நியச் செலாவணியைப் பெற்றோம். அதற்கு ஜனாதிபதி என்ற வகையில் நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

உங்களின் கடின உழைப்புத்தான் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தியது என்றே கூற வேண்டும்.

2022 இல் நாடு இருந்த நிலைக்கு மீண்டும் செல்வதை இங்குள்ள யாரும் விரும்பவில்லை என்று நினைக்கிறேன். அதற்கு நாங்கள் யாரும் தயாராக இல்லை. நாங்கள் மிகவும் மோசமான சூழ்நிலைக்குச் சென்றோம்.

தற்போது இந்த நாட்டின் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளது. ரூபாயின் பெறுமதி வலுப்பெற்றுள்ளது. தற்போது அனைவருக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட்டது. மேலும், அஸ்வெசும திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் நிவாரணத்திற்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் தனியார் துறையினரின் சம்பளத்தை அதிகரித்துள்ளோம்.

சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பால், சுற்றுலா வருமானமும் அதிகரித்துள்ளது.அத்துடன், தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை நாம் அறிவோம். இந்த லயன் அறைகளை சட்டபூர்வமாக கிராமங்களாக அறிமுகப்படுத்த நானும் பிரதமரும் ஆலோசித்துள்ளோம்.அதன் மூலம் இந்த இடங்களுக்கு கிராமங்களுக்கு கிடைக்கும் வசதிகள் கிடைக்கும். அதற்கான செயற்பாடுகளை அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் இணைந்து தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். அத்துடன் பெருந்தோட்டப் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். அவர்களுக்கு விஞ்ஞானப் பாடங்களை கற்பிக்க தேவையான ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நான் பிரதமராக இருந்த போது தோட்டங்களில் உள்ள பல பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வு கூடங்களை ஆரம்பித்தேன்.சில பாடசாலைகளில் இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்த்து, அவற்றை மேம்படுத்தும் பணியும் இடம்பெற்று வருகிறது. மேலும், பெருந்தோட்டங்களில் தொழில்கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தோட்டத் தொழிலாளர்களை அரசாங்கம் என்ற ரீதியில் நாம் மறக்கவில்லை. அந்த மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் நான் புரிந்துகொண்டுள்ளேன்.

எனவே எனக்குக் கீழ் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுமென ஜனாதிபதி என்ற வகையில் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். 1982 ஆம் ஆண்டு சௌமியமூர்த்தி தொண்டமானின் வேண்டுகோளுக்கிணங்க நான் அப்போதைய கல்வி அமைச்சராக பெருந்தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். பின்னர் 1986 இல் குடியுரிமை இல்லாதவர்களுக்கு குடியுரிமை வழங்குவதாக ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன அறிவித்த போது நானும் அதற்கு ஆதரவளித்தேன்.

2003 ஆம் ஆண்டில் ஆறுமுகன் தொண்டமானுடன் இணைந்து இந்தியாவில் குடியுரிமை இருந்தும் மீண்டும் அங்கு செல்ல விரும்பாத மக்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டது.தற்போது அந்த பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிட்டன. இப்போது இந்த பகுதிகளை முன்னேற்றுவதற்கான நேரம் இது. எனவேதான சம்பளத்தை அதிகரித்து இந்த பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம்.மேலும் விவசாய நவீனமயமாக்கல் திட்டம் கிராமத்திற்கு மட்டுமல்ல, பெருந்தோட்டத்திற்கும் கொண்டு வரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார: இன்றைய மேதின நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்படும் எனத் தெரிவித்தார். இந்த சம்பளத்தை உயர்த்த ஒருவரும் கடுமையாக முயற்சி எடுக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டது. மே முதலாம் திகதி முன்னர் இந்த சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்திருந்தார். பல மாதங்களுக்கு முன்னரே பெருந்தோட்டக் கம்பனிகளை வரவழைத்து இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது. பெருந்தோட்டங்கள் அரசாங்கத்துக்கு சொந்தமானவை. உங்களுக்கு தேவையான வசதிகளை அவர்களால் வழங்க முடியாவிட்டால், அரசாங்கம் தீர்க்கமான முடிவெடுக்க வேண்டி வரும். அதற்கமையவே சம்பள உயர்வு வழங்கப்படுகிறது. அதோடு நிற்காமல், மேலதிகமான ஒவ்வொரு கிலோ தேயிலைக் கொழுந்துக்காகவும் 80 ரூபாய் வழங்க முடிவு செய்துள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை இன்று வெளியிட்டு அதனை உங்கள் முன்னிலையில் அறிவித்துள்ளார்.

ஒரே இலங்கை தேசமாக உங்களுக்கான காணி உரிமை உட்பட சகல உரிமைகளையும் வழங்குவதே தற்போதைய ஜனாதிபதியின் தொலைநோக்குத் திட்டமாகும். இரண்டு வருடங்களுக்குள் இந்த நாட்டை ஸ்திரப்படுத்திய போன்று உங்கள் அனைவரின் வாழ்க்கையையும் கட்டியெழுப்புவதற்கான நடைமுறைத் திட்டம் அவர் தலைமையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை உங்களுக்கு அறிவிக்க விரும்புகின்றேன் என்றார்.

மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தவிசாளர் பாரளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஷ்வரன்,தேசிய அமைப்பாளர் ஏ.பி சக்திவேல்,பிரதித் தலைவர் கனபதி கனகராஜ், பிரதி தலைவி அனுஷியா சிவராஜா, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள்,ஆதரவாளர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## தேர்தலை வெற்றிகொள்ள...

இடமளிக்கமுடியாது என குறிப்பிட்ட அவர், முன்னேற்றகரமான புதிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். கம்பஹா நகரசபை மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்ட மேற்படி மே தினக் கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி,

மே தினமானது அரசியல்வாதிகளின் தினம் அல்ல. அது தொழிலாளர்களின் தினம். அதற்கிணங்க எமது கூட்டத்தில் மக்களுக்காக மக்களின் சுபிட்சத்துக்காக வாழ்க்கையை அர்ப்பணிப்பவர்களே வருகை தந்துள்ளார்கள். கட்சி எம்.பிக்கள் அரசாங்கத்திற்கு சென்றாலும் அது தவறு. எனினும் விஜேதாச ராஜபக்ஷவை நாம் எடுத்துள்ளது சரியா என கேள்வி எழலாம். அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தனது அமைச்சுப் பதவியையும் பொருட்படுத்தாது எம்மோடு இணைந்துள்ளார். மக்கள் எம்முடனேயே உள்ளனர். நாம், புதிய வேலைத்திட்டத்திற்குச் செல்லவுள்ளோம். இதற்கான அடிக்கல்லையே இன்று நடுகிறோம். எவரும் எவருடனும் இணையலாம். ஆனால் எவரும் நினைப்பதுபோல் தன்னிச்சையாக கட்சியை இன்னொருவரிடம் இணைப்பதற்கு இடமளிக்கமுடியாது. நாம் கட்சியை யாரிடம் பொறுப்புக் கொடுப்பது அல்லது யாரிடம் பொறுப்புக்கொடுக்கக்கூடாது என்பது தொடர்பில் மக்கள் உணர்ந்துள்ளனர். அந்த வகையில், நாட்டுமக்களின் வறுமையை ஒழிப்பதற்கு நாம் வேலைத்திட்டம் தயாரித்துள்ளோம். எதிர்வரும் தேர்தலை வெற்றிகொள்வதற்கு விரிவான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்றார்.

இன்றைய பலன்கள் (02.052024)
கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:** பங்குச் சந்தையில் எதிர்பார்க்கும் லாபம் இருக்காது. புதிய நண்பர்களின் ஆலோசனை பலன் அளிக்கலாம். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற தீவிர முயற்சி மேற்கொள்வார்கள்.

**ரிஷபம்:** கூட்டு தொழில் செய்பவர்கள் சுமாரான வருவாய் ஈட்டுவர். பங்கு சந்தை வியாபாரத்தில் அதிக லாபம் பெற அன்றாட நிலவரங்களை கவனிப்பது நல்ல பலன் தரும்.

**மிதுனம்:** பங்குகளை வாங்கும்போது அதன் ஸ்திர தன்மையை ஆராய்ந்து வாங்குங்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளில் பங்கு கொள்ள வெளியூர் பயணிப்பார்கள்.

**கடகம்:** பங்குச் சந்தையில் பங்குகளின் தன்மை அறிந்து முதலீடு செய்வது நல்லது. கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களில் பங்கேற்பர். சக கலைஞர்களின் ஒத்துழைப்பால் பணிகளில் முன்னேற்றம் காணப்படும்.

**சிம்மம்:** பங்குச்சந்தை நன்றாக நடைபெறும். கலைத்துறையினர் புதிய ஒப்பந்தங்களால் புகழ் அடைவதுடன் தேவையான வருவாயும் ஈட்டுவர்.

**கன்னி:** உரியவர்களிடம் ஆலோசனை கேட்டு செயல்பட்டால் பலன் கிடைக்கக்கூடும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற தீவிர முயற்சிகளில் ஈடுபட வேண்டிய நிலை உருவாகும்.

**துலாம்:** கலைஞர்கள் புதிய நிறுவனங்களின் ஒப்பந்தங்களில் பணியாற்றுவர் .திருப்தியான வருமானம் வந்து சேரும். குடும்பத்தில் சீரான போக்கு காணப்படும்.

**விருச்சிகம்:** பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் இருக்காது. புதிதாக முதலீடு செய்வதை தவிர்ப்பது நல்லது. கலைஞர்கள் கடினமான பணிகளில் பங்கேற்கும் போது கவனமாக செயல்படுங்கள்.

**தனுசு:** கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் புதிய ஒப்பந்தங்களில் ஆர்வத்துடன் பணியாற்றுவார்கள். இருப்பினும் வருமானம் போதுமானதாக இருக்காது.

**மகரம்:** கலைஞர்கள் புதிய வாய்ப்பினை பெற தீவிர முயற்சி மேற்கொள்வார்கள். சக கலைஞர்கள் அனுசரணையாக இருப்பார்கள். குடும்பத்தில் இருந்த சிறிய கடன் தொல்லை தரலாம் .

**கும்பம்:** கலைஞர்கள் பெரிய நிறுவனங்களில் வாய்ப்புகளை பெற முயற்சிப்பார்கள். குடும்பத்தில் உள்ள பிரச்சினைகளை கூடி பேசி சுமுகமாக சரி செய்து கொள்வீர்கள்.

**மீனம்:** எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். கலைத்துறையினர் புதிய ஒப்பந்தங்களில் பங்கு பெற வெளியூர் பயணங்கள் மேற்கொள்ள நேரிடும்.

## ஸ்ரீல.சு.க ஜனாதிபதி...

(03ஆம் பக்கத் தொடர்)

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தாம், ஜனாதிபதியாக ஏற்கனவே பதவி வகித்துள்ளதால் மீண்டும் அந்தப் பதவிக்கு போட்டியிடப் போவதில்லை என குறிப்பிட்டுள்ள அவர், விஜேயதாச ராஜபக்சவே சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட உள்ளார் என்று உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

## 13 ஆவது திருத்தச் சட்டம்...

கட்சிகள் செய்யாத சேவையை தற்போது எதிர்க்கட்சியாக மக்களுக்கு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தாம், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் 50 வீதமானவற்றை எதிர்க்கட்சியாக செய்து முடித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"ஐக்கியமான நாடு சுபீட்சமான எதிர்காலம்" எனும் தொனிப்பொருளில் கொழும்பு செத்தம் வீதியில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

76 வருட வரலாற்றைப் பற்றி பேசும் போது ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் பயணம் குறித்து அனைவரும் பெருமை கொள்ள வேண்டும்.

நாட்டின் 76 ஆண்டுகளில் எந்த அரசியல் தலைவர்களும் எந்தப் பதவியும் அதிகாரமும் இல்லாமல் எந்தப் பணியையும் செய்யவில்லை. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி எந்த ஒரு அரசியல் கட்சியும் செய்யாத சேவையை வரலாற்றில் முன்னெடுத்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி இலங்கையின் முதல் தரக் கட்சியாக விளங்குகிறது.

நாட்டை அழித்தவர்களுடன் எமக்கு எந்த ஒப்பந்தமும் இல்லை.அவ்வாறு ஒப்பந்தம் செய்ய வேண்டியிருந்தால், பிரதமர் பதவியையோ அல்லது ஜனாதிபதி பதவியையோ என்னால் பெற்றுக் கொண்டிருக்க முடியும்.

நானும், எனது தரப்பும் எப்பொழுதும் மக்களுக்காகவே கொள்கை ரீதியாக தீர்மானங்களை எடுத்து செயற்படுத்துகிறோம்.

நாட்டில் கொலைக் கலாசாரத்துக்கும் வன்முறைக்கும் இடமில்லை. நாட்டில் நீதி, நியாயம் மட்டுமே இருக்க வேண்டும். போதைப்பொருள் கலாசாரம், தீவிரவாதம், இனவாதம் போன்ற வற்றுக்கு இடம் கிடையாது.

எந்த ஒரு பயங்கரவாதமும் தலைதூக்க அனுமதிக்கப்படமாட்டாது . மேலும் இந்த நாட்டில் சிங்களவர் அல்லாத மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு வழங்கப்படும். இதற்காக13 ஆவது திருத்தம் செயற்படுத்தப்படும்.

சலுகைகள் அன்றி மக்களுக்காகவும் நாட்டுக்காகவும் சேவையாற்ற விரும்பும் அனைவருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் கதவுகள் திறந்துள்ளன . கொள்கையை அடிப்படையாக கொண்ட ஆட்சியாக எம்முடன் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கிறோம் . இவ்வாறு எதிர் கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## மே, 20க்கு முன்னர் SJB,...

இதற்கு நான்கு நாட்கள் அவகாசம் கொடுத்தோம். நான்கு நாட்களும் வேலையாக உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். இரவிலும் வேலை செய்யும் இவர்கள் மக்களுக்கு எதைச் செய்தார்கள். இம்மாதம் 20 க்கு முன்னர் விவாதத்திற்கான நாளை ஒதுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியினரிடம் கோருகிறோம். இந்த காலப்பகுதியில் எந்தவொரு நாளிலும் விவாதத்திற்கு நாங்கள் தயார். ஊழலை ஒழிப்பதாக மக்களிடம் வாக்குறுதி வழங்கியோர் இதுவரை காலமும் எதையும் செய்ய வில்லை.

## மே தின கூட்டங்களில்...

ஏனைய கட்சிகளின் பேரணிகளில் கலந்து கொண்டவர்களை விட அதிகம் என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பில் நடைபெற்ற ஜனதா விமுக்தி பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்ட போதிலும், யாழ்ப்பாணம் மற்றும் அனுராதபுரத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டங்களில் மக்கள் கூட்டம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மாத்தறை பேரணியில் கணிசமான மக்கள் பங்கேற்றுள்ளனர்.

மலையகத்தில் நடைபெற்ற பேரணிகளில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்திலே அதிகளவானோர் கலந்துகொண்டிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின பேரணிக்காக மக்கள் ரயில்களில் முன் பதிவு செய்து கொழும்புக்கு வருகை தந்தமை சிறப்பம்சமாக இருந்தது.

# கொழும்பில் ஐ.தே.கவின் மே தின கூட்டம்








# ஐ.ம.சவின் மே தின ஊர்வலம் கொழும்பில்









# மே, தின நிகழ்வில் மரக்கன்றுகள் விநியோகம்

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

சிலோன் ஜேர்னலிஸ்ட் போரம் ஏற்பாடு செய்த மே, தினக் கொண்டாட்டம் அட்டாளச்சேனை சந்தை சதுக்கத்தில் இடம் பெற்றது.

போரத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எஸ்.எம்.ஜஃபர் (ஜே.பி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில், விசேட அதிதியாக அக்கரைப்பற்று ஹல்வானி பேக்கரியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் தொழிலதிபருமான எஸ்.ஏ.எம். சித்தீக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விசேட துஆ பிரார்த்தனையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில், பயன்தரும் மரங்கள் மற்றும் கற்றாளைக் கன்றுகள் வழங்கப்பட்டன.

சுற்றாடலை நேசிக்கும் சமூகத்தை உருவாக்க வீடுகள் தோறும் மரக்கன்றுகள் மற்றும் விழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நோக்குடனே மக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

# சொல்வதை செய்வதும் செய்வதை சொல்வதுமே இ.தொ.காவின் அரசியல்

## மலையக மக்களின் மேம்பாடுகளுக்கே என்றும் முன்னுரிமை தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வுக்காக ஜனாதிபதி, தொழிலமைச்சருக்கு நன்றிகள்

செய்வதைச் சொல்வதும்,சொல்வதைச் செய்வதும்தான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என,இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை பொது மைதானத்தில் நடைபெற்ற இ.தொ.காவின் பிரமாண்ட மேதினக் கூட்டத்திலேயே இவ்வாறு கூறினார்.

மே தின நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான்,

கடுமையான போராட்டங்களூடாக தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பள உயர்வை பெற்றுக்கொடுத்துள்ளோம். குறுகிய காலத்தில் இந்த செயல்பாட்டை வெற்றிகரமாக்க ஒத்துழைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கு நன்றிகள்

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சொல்வதை மட்டும்தான் செய்யும். செய்வதை மட்டும்தான் சொல்லும். இ.தொ.கா.வின் மறைந்த தலைவர்களான சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் எமக்கு கற்பித்ததும் இதைத்தான்.

எதிர்காலத்திலும் இ.தொ.கா இதையே செய்யும். காங்கிரஸ் என்ன செய்ததென சிலர் கேள்வி கேட்கின்றனர்.

கேள்வி கேட்கும் உரிமையை பெற்றுக்கொடுத்ததே காங்கிரஸ் தான்.

கம்பனிகளுக்கு ஆதரவாக காங்கிரஸை குறை சொல்கின்றனர். தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்தாத கம்பனிகளுக்கு எதிராக ஒரு போராட்டத்தைகூட நடத்துவதில்லை இவர்கள். ஆனால், மக்களுக்காக போராடும் இ.தொ.காவுக்கு எதிராக இல்லாதக் கதைகளையும் கூறுகின்றனர். இது ஒரு நாகரீமாகி விட்டது.

இதற்கு இன்று இந்தக் கூட்டத்தின் ஊடாக பதில் அளிக்கிறோம். இ.தொ.காவால் மாத்திரம்தான் இலங்கையில் மூன்று நாட்களில் இவ்வளவு பெரிய மக்கள் கூட்டத்தை கூட்ட முடியும். வெறும் மூன்று நாட்களில்தான் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம். ஏனையவர்கள் மாதக்கணக்கில் நோட் புத்தகத்தை வைத்துக்கொண்டு கூட்டத்தை எங்கு செய்வதென திட்டம் வகுத்துக் கொண்டிருக்கின்றனர்.



இ.தொ.காவுக்கான கட்டமைப்பை எமது முன்னாள் தலைவர்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

1948 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தருணத்தில் உரிமைகளற்ற சமுதாயமாக நாம் இருந்தோம்.

இதற்கு எதிராக தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்க பலத்தின் ஊடாக போராடி இன்று ஏனைய சமூகங்களுக்கு சமமாக படிப்படியாக உரிமைகள் பெற்ற சமூகமாக மலையக மக்களையும் மாற்றியவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான். அனைவரும் வரலாறுகளை மறந்துவிடுகின்றனர்.

தமிழரசுக் கட்சியின் மறைந்த தலைவர் தந்தை செல்வா தமது கட்சி இரண்டாக பிளவுபட்ட போதும், மலையக மக்களின் உரிமைகளுக்கு குரல்கொடுக்க அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானுடன் கைகோர்த்திருந்தார். இவ்வாறு அனைவரது தியாகங்களுடனும்தான் இன்று நாம் குடியுரிமை மற்றும் வாக்குரிமை பெற்ற சமூகமாக மாறியுள்ளோம்.

அதன் பின்னர் அமரர் ஆறுமுகன் தொண்டமானிடம் சௌமியமூர்த்தி தொண்டமான், கடமைகளை கையளித்திருந்தார்.

அந்தப் பொறுப்புகளை முழுமையாக முடிக்க முன் அவர் எம்மைவிட்டு பிரிந்திருந்தாலும், சௌமியமூர்த்தி தொண்டமான், வழியில் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொடுத்த தலைவராக ஆறுமுகன் தொண்டமான் இருக்கிறார்.

குடியுரிமையை முழுமையாக எமது மக்களுக்கு பெற்றுக்கொடுத்தது இவரது காலத்தில்தான். இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

# ஒலுவில் துறைமுகத்துக்கு இந்திய உயர் ஸ்தானிகர் விஜயம்

## அபிவிருத்தி, கலந்துரையாடல் குறித்து பேச்சு

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்



இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகளர் நேற்று ஒலுவில் துறைமுக பகுதிக்கு விஜயம் செய்தார்.ஒலுவில் துறைமுகம் அமைந்துள்ள பிரதேசத்தைப் பார்வையிடுவதற்கும்,அதன் அபிவிருத்தி தொடர்பில் மேலதிகாரிகளுடன் கலந்துரையாடும் நோக்கிலும் அவர் அங்கு சென்றிருந்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் வேண்டுகோளின் பேரிலே, அவரது விஜயம் அமைந்தது.

ஒலுவில் துறைமுகத்தையும் அதை சூழவுள்ள பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்வது தொடர்பிலும், அப்பிரதேசத்தில் ஏற்படும் கடலரிப்பு தொடர்பிலும் கலந்துரையாடல் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிம், முன்னாள் மாகாண அமைச்சர்களான எம்.எஸ்.உதுமாலெவ்வை । எம்.ஐ.எம். மன்சூர் உள்ளிட்ட மற்றும் அரச உயரதிகாரிகள், மீனவர்கள், துறைசார் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

ஒலுவில் துறைமுகம் அமைப்பதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், அப்பிரதேசத்தில் பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகள் எழுந்துள்ளன. கடலரிப்பு, மண்வாரிடல் மற்றும் பெருக்கு ஏற்படல் போன்ற பிரச்சினைகள் மீனவர்களின் வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும்,சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வது குறித்தும் இந்திய உயர்ஸ்தானிகருடன் முக்கிய கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

# கிழக்கின் குரல்

## அக்கரைப்பற்றில் மே தின நடைபவனி




அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

"த வோக்கஸ் யூனியன்" அமைப்பின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்றில் மே தின நிகழ்வு நடைபெற்றது. அமைப்பின் தலைவர் எம்.எச். ஜெய்னுடீன் தலைமையில் அக்கரைப்பற்று பிரதான பஸ் நிலையத்திற்கு முன்னால் இந்நிகழ்வு நடந்தது.

"த வோக்கஸ் யூனியன் அமைப்பினர் அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா வளாகத்திலிருந்து நடை பவனியாக அக்கரைப்பற்று பிரதான பஸ் நிலையத்தில் ஒன்று கூடினர்.தொழிலாளர் தினத்தின் முக்கிய நிகழ்வுகளும் இதில் இடம்பெற்றன.

## அகில இலங்கை மருத்துவர் சமூக மக்கள் பேரவையின் மாநாடு



பாண்டிருப்பு தினகரன் நிருபர்

அகில இலங்கை மருத்துவர் சமூக மக்கள் பேரவையின் முதலாவது தொழிலாளர் மாநாடு, அமைப்பின் தலைவர் கவிஞர் தமிழ்விந்தன் தலைமையில் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது .

'ஒற்றுமையே எமது பலம் உறவுகளை ஒன்றிணைப்போம்" எனும் தொனிப்பொருளில் இத்தொழிலாளர் தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியரகள், மருத்துவ நிபுணர்கள், அரச அதிகாரிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஒப்பனையாளர் சங்கங்களின் தலைமைகள், சமூக ஆர்வலர்கள் ,மாவட்ட இணைப்பாளர்கள், ஆலோசகர்கள் உட்பட பலரும் இதில் பங்குபற்றினர்.

நாடு பூராகவுமுள்ள உறவுகளை ஒன்றிணைத்தல்,சமூகத்தினருக்கான தொழில் உரிமையை உறுதிப்படுத்தல்,கல்வியில் சம அந்தஸ்தை உறுதி செய்தல்,அரச பதவிகளிலும் சம அந்தஸ்து கிடைக்கச் செய்தல், அரசியல் சபைகளில் இட ஒதுக்கீடு போன்ற தீர்மானங்கள் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

# ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் தலைவராக நஹீம் மீண்டும் தெரிவு

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைந்த பிரதேச ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் தலைவராக மீண்டும் எம்.ஏ.எம் நஹீம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வருடாந்த பொதுக்கூட்டத்திலேயே நஹியா மீண்டும் தலைவராகத் தெரிவாகியுள்ளார். அக்கரைப்பற்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் தலைவர் டாக்டர் எம்.ஏ.எம் நஹீம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்த்திற்கு, அம்பாறை மாவட்ட தமிழ்பேசும் பிரதேசங்களைச் சேர்ந்த பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டம் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஸ்ஷெய்க் .ரீ.எம் எம். அன்சார், திட்டமிடல் பணிப்பாளர் ஏ .எம். சமீம், சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகஸ்தர் யூ எல்.எம் ஆகீர் மற்றும் கிராம சேவர்களுக்கான நிர்வாக உத்தியோகஸ்தர் எம்.ஐ.நசீர் ஆகியோர் முன்னிலையில் நடைபற்றது.

ஆயுர்வேத வைத்தியர்கள் ஆற்றிவரும் அர்பணிப்பான சேவைகள் பற்றியும் அவர்களுக்கு பிரதேச செயலகம் கைகொடுத்து உதவ வேண்டியதன் அவசியம் பற்றியும் இதில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

ஆயுர்வேத வைத்தியர்களுக்கான அடையாள அட்டை, அவர்கள் சுயமாக இயங்குவதற்கான காரியாலயம் ஒன்றை அமைக்கவேண்டியதன் அவசியம் மற்றும் தேவைகள் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டன.

பிரதேச செயலாளர் அஸ்ஷெய்க். அன்சார் தனது உரையின்போது பாரமபரிய ஆயுர்வேத வைத்தியர்கள் ஆற்றிவரும் அர்ப்பணிப்பான சேவைகளைப் பாராட்டியதுடன், அவர்களின் தேவைகளை உடன் நிவர்த்தி செய்ய தாம், ஆவன செய்வதாகவும் உறுதியளித்தார்

அமைப்பின் தலைவராக டாக்டர் எம்.எ.எம். நஹீம் உபதலைவராக டாக்டர் ரீ.சிவமணி, செயலாளராக டாக்டர் எம்.எம்.முபாரக், உப செயலாளராக எ.எம்.மன்சூர், பொருளாளராக டாகடர் எஸ்.எம் செயினுலாப்டீன், மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக ஒவ்வொரு ஊரிலிருந்தும் ஒருவராக எட்டுபேர் தெரிவாகினர்.

# பிரதி கல்விப்பணிப்பாளர் மஜீத்திற்கு பிரியாவிடை

காரைதீவு குறூப் நிருபர்



சம்மாந்துறை வலயத்தின் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய ஏ.எல்.அப்துல் மஜீதுக்கு பிரியாவிடை வழங்கப்பட்டது. அக்கரைப்பற்று வலயத்துக்கு இவர், இடமாற்றமாகிச் செல்வதையிட்டே இந்நிகழ்வு மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது.

சம்மாந்துறை வலய நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.எம்.யசீர் அரபாத் மொஹைடீன் தலைமையில் பணிமனையின் கேட்போர் கூடத்தில் (30) இந்நிகழ்வு நடந்தது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி ஏசி.நுஸ்ரத் நிலோபரா, எச்.நைரூஸ்கான், பி.பரமதயாளன் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.சம்மாந்துறை வலய கல்விசார் உத்தியோகத்தர்களின் நலன்புரி ஒன்றிய தலைவரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா நிகழ்வை நெறிப்படுத்தினார். சம்மாந்துறை வலய கல்வி வளர்ச்சியில், பிரதிக் கல்விப் பணிப்பாளர் மஜீத் ஆற்றிய அருஞ்சேவைகளை பாராட்டி பலரும் உரையாற்றினர். பணிப்பாளர்களுடன் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம் எம். ஜௌபர், வளவாளர் எஸ் எல். அப்துல் முனாப் ஆகியோரும் உரையாற்றினர்.

# காத்தான்குடியில் தாகசாந்தி நிகழ்வு



மட்டக்களப்பு குறூப் நிருபர்

காத்தான்குடி பிளிட்ஸ் இளைஞர் சமூக அமைப்பு மற்றும் ஆட்டோ சங்கம் இணைந்து தாகசாந்தி நிகழ்வை ஏற்பாடு செய்தன. தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இந்நிகழ்வு குட்வின் சதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதிக உஷ்ணம் நிலவும் இக்காலத்தில் வீதியில் செல்லும் பயணிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் மே தின ஊர்வலங்கள், கூட்டங்களில் பங்கேற்போர் கடும் தாகத்துக்கு உள்ளாகின்றர்.

இவர்களின் தாகத்தை தீர்க்கும் பொருட்டு இவர்களுக்கு குளிர்பானங்கள் வழங்கப்பட்டன.சுமார் மூவாயிரம் பேருக்கு குளிர்பானம் வழங்கப்பட் டது.

அடையாளம் 4

# சஹீட் எம். ரிஸ்மியின் பார்வையும் பதிவும்

# பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ்



அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவை ஏற்பாட்டில் 210 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு கண்டி சிறுவர் நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதன் பிரதான பேச்சாளராக பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி எம். எஸ். எம். அனஸ் கலந்து கொண்டார். அவருடைய அன்றைய பேச்சானது கலாநிதி ஏ. எம். அஸீஸுடைய கல்வி எழுச்சியை பறைசாற்றக் கூடியதாக இருந்தது. அவருடைய அருமையான பேச்சு. வசீகரத் தன்மை கொண்டதாக இருந்தது. முஸ்லிம்களுடைய கல்வி மறுமலர்ச்சி குறித்து திறமையாக உரையாற்றினார். எல்லாமே அற்புதமாக இருந்தன.

சில வருடங்களுக்குப் பின் கண்டி மஹியாவை காட்டுப் பள்ளியில் அமைந்துள்ள அறிஞர் சித்திலெப்பை அவர்களுடைய அடக்கஸ்தலத்தில் தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேட துஆப் பிராத்தனை இடம்பெற்றது. பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் தலைமையிலேயே அது இடம்பெற்றது. அதில் முன்னாள் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் எம். எச். சலீம்டீன், கணக்காளர் முபாரக், பள்ளி நிர்வாகத்தினர், சித்திலெப்பையின் குடும்பத்தினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் சிறு உரையொன்றை நிகழ்த்தினார். அது சிறிய உரையாக இருந்தாலும் இனி கேட்கவா வேண்டும். அம்மையவாடியில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் மீளவும் எழுந்து வந்து அறிஞர் சித்திலெப்பை ஆற்றிய பணியைப் போல தாங்களும் ஏதாவது தம் சமூகத்திற்கு செய்து விட்டு மீளவும் மரணிக்க வேண்டும் போலல்லவா இருந்தது.

தேசிய சுதந்திரத்திற்காக பங்காற்றியவர் அறிஞர் சித்திலெப்பை. அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய தேசிய வீரர்களுள் ஒருவராய் அவர் நாட்டிலே மதிக்கப்படுகிறார். அவரைப் போல இன்றைய தலைமுறையினர்களும் எமது மண்ணில் பிறந்து எமது மண்ணுக்கு உரியவராகத் திகழ வேண்டும் என்ற வகையில் அந்தப் பேச்சு அமைந்திருந்தது.

ஆய்வறிவுத் துறையில் தன் பெயரை பதிவு செய்தவர்களுள் பேராசிரியர் எம். ஏ. நுஹ்மான், பேராசியர் எம். எல். ஏ. காதர், பேராசிரியர் அமீர் அலி, பேராசிரியர் மாமு . உவைஸ், பேராசிரியர் ஹஸ்புல்லாஹ், கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி வரிசையில் பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் அவர்களும் முக்கிய இடத்தைப் பெறுகிறார். பேராசியர் எம். எஸ். எம். அனஸ் அவர்கள் ' இந்த உலகத்தில் எந்த மனிதனாக இருந்தாலும் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும்' என்று அல்லாமா இக்பாலின் கூற்றையும் எழுத்தையும் இணைத்து தனது ஆய்வுத் திறனையும் கல்வி நடவடிக்கைகளையும் நோக்கும் மனப்பான்மையைக் கொண்டவர். அதனால் தான் அவருடைய காலத்தில் எண்ணற்ற ஆய்வு நூல்களையும், இலக்கியப் பணிகளையும் எழுதி தன் ஆளுமையின் அடையாளத்தைப் பதிவு செய்துள்ளார். இப்பேரறிஞரை அவருடைய இல்லத்திற்கும் நானும் நண்பர் இக்பால் அலியும் சென்று அவருடைய ஆளுமைகளைப் பதிவு செய்து கொண்டோம். விரிவான பதிவை தினகரன் பத்திரிகைக்காக வழங்கினார்.



முஹம்மது ஸாலிஹு முஹமட் அனஸ் (எம். எஸ். எம். அனஸ்) அவர் வாப்பா பள்ளிவாசல்துறை. உம்மா கல்பிட்டி. அவருடைய பண்பாட்டுப் பார்வைகளுக்கு மிக முக்கிய காரணம் அவருடைய தந்தையாகும். தமிழ் நாட்டில் காயல் பட்டிணம் என்று கூறுவதைப் போன்று கல்பிட்டியும் அந்த மாதிரியான புகழ் உருவானதற்கான தடங்கள் உள்ளன.

மரைக்கார் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் இருக்கிறார்கள் என்றால் அதன் பூர்வீகத்தவர்கள் கல்பிட்டியில்தான் இருக்கிறார்கள். பள்ளிவாசல் துறை, ஆலங்குடா, திகழி ஆகிய பெயர் பெற்ற ஊர்களில் மரைக்கார் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் ஓர் ஊரில் நான்கு ஐந்து குடும்பங்கள் இருப்பார்கள். ஏனைய மக்களும் வாழ்ந்து வந்தனர்.

அவருடைய குடும்பம் மரைக்கார் வம்சாவளியைச் சேர்ந்த குடும்பமா என்று சொல்ல முடியாது. ஆனால் மரைக்கார் பெயர்கள் இருக்கின்றன. அவருடைய தந்தையின் தந்தையார் பெயர் அபூபக்கர் மரைக்கார். அவர் தாய் கல்பிட்டி. தாயாரின் தந்தையின் பெயர் முஹம்மது அலி மரைக்கார். ஆனால் அவர் மரைக்கார் வம்சமா அல்லது பொதுவாக கல்பிட்டியில் உள்ள மரைக்கார் பிரிவில் அவர்கள் இணைந்து கொள்ளவில்லை. அவர் தாயாரின் குடும்பத்தில் மதார் மரைக்கார். பாவலெவர் மரைக்கார் என்று உள்ளன. அவருடைய தந்தை கல்பிட்டியில் திருமணம் செய்தார்.

அப்பொழுது மணாளன் இல்லத்தில்தான் பெண் வாழ்க்கை நடத்துவார்கள். இப்பொழுதும் அந்த நடைமுறை இருக்கிறது. கல்பிட்டியில் கிடையாது. புத்தளம் நகரில் வீடுகள் கொடுப்பார்கள். வீடு, காணி, நகை நட்டுகள் கொடுக்க வேண்டும். இப்பொழுது மாற்றங்கள் வந்துள்ளன. கல்பிட்டியைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் அந்தச் சீதனப் பிரச்சினை இல்லை. பெண் எவ்வளவு வசதியோ பிரச்சினை இல்லை. மணாளன் வீட்டில்தான் வந்து வசிக்க வேண்டும். அதே போன்றுதான் அனஸ் அவர்களின் தாயார். அவர் தந்தையை விட வசதி கூடியவர். பெரிய வசதிகள் இருந்தன. இப்போது அந்த வீடு இருக்கிறது. அந்த நேரத்தில் அப்படியான வீடுகள் கல்பிட்டியில் நான்கு ஐந்து வீடுகள்தான் இருந்தன. அதில் ஒன்று அவர் தாயுடைய வீடு. அப்பொழுது அங்கு மாடி வீட்டுக்கு மச்சி வீடு என்று சொல்வார்கள்.

அவர் குடும்பத்தில் முதலாவது பிள்ளை 1949 களில் பிறந்தார். அவர் தந்தை அபூபக்கர் மரைக்கார். அவர் தொழில் வர்த்தகமாகும். முத்து வியாபாரம் செய்தார். மன்னாரில் இருந்து கல்பிட்டிக்கு முத்து வியாபாரம் செய்துள்ளார். மொத்தமாக வாங்கி ஊரிலே விற்பனை செய்வது ஆகும்.

தந்தையின் தந்தை தென்னம் தோட்டம் செய்தார்கள். இப்பொழுதும் அந்த தோட்டங்கள் இருக்கின்றன. அந்த வரலாற்றை அவர் எழுதிக் கொண்டு இருக்கின்றார். முஸ்லிம்கள் போல் எல்லா இடங்களிலும் சுறுசுறுப்பாக உழைத்தவர்கள் வேறு எவரும் இந்த நாட்டில் இல்லை. அவர்கள் எதையும் செய்வார்கள். அவர்களிடத்தில் படிப்பில்லை. அறிவில்லை. அது வேறு விடயம். ஆனால் என்ன அறிவு இல்லை அவரைப் போன்று பெரிய படிப்பு படிக்க வில்லையே தவிர அவர்களுக்கு எல்லா அறிவும் தெரியும்.

அவர் தந்தையின் தந்தைக்கு அறுவாக்காட்டில் காணி இருந்தது. அறுவாக்காட்டில் குப்பைகள் கொட்டப்படுவது தொடர்பான பிரச்சினை எழுந்த இடம் ஆகும். அந்த குப்பை கொட்டிய இடம் அவருடைய காணிதான். 2000 ஏக்கர். அதற்கான ஆவணம் இருக்கிறது. அங்கு சென்று தென்னை பயிர்ச் செய்கை மேற்கொண்டுள்ளார்கள். கல்பிட்டி சென்று கடலை இலகுவாக கடந்து சென்று தெங்கு செய்கை மேற்கொண்டுள்ளார்கள். மூன்று மணித்தியாலம் செல்லும். இப்போது யாரும் செல்ல முடியாது. அப்போது அங்கு தென்னங் காணிகளை உருவாக்கி, விவசாயக் காணிகளை உருவாக்கி இருந்தார்கள். அந்தக் காணியை மோசடி செய்து அநியாயம் இழைத்து விட்டார்கள். அந்த இடத்தில் விவசாயம் செய்தவர்கள் தராதாயம் என்று சொல்லி நெல் மூடைகளை அவர் வீட்டுக்கெடுத்து விட்டுச் செல்வார்கள். அவர் தந்தை சாலிஹ். அவருடைய தந்தைக்கு தலைவில் என்ற இடத்தில் பெரியளவில் காணிகள் இருந்தன. ஒஸ்தாத் தோட்டம் என்று அதற்குப் பெயர். தொலை தூரம் என்று பாராமல் எங்கெல்லாம் வேகமாகச் சென்று காணி பூமிகளை வாங்கி விவசாயம் செய்ய முடியுமோ அங்கெல்லாம் சென்று எமது மூதாதையர்கள் விவசாயம் செய்து நாட்டுக்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்கள்.

அவர் தந்தை கரைதீவில் விதானையாக் கடமையாற்றினார். வெள்ளைக் காரன் காலத்தில் வழங்கப்பட்ட பதவியாகும். கண்டியில் வரலாற்றை இலகுவாக எழுதலாம். புத்தள வரலாற்றை எழுதுவது கடினம். கண்டி மன்னராட்சியின் கீழ்தான் கல்பிட்டி இருந்தது. மன்னர் அவ்வளவு தூரம் வந்து அந்த இடங்களை பார்க்க முடியாது. நாவற்காட்டுக்கு இரண்டு தடவை மன்னர் வந்து விட்டுச் சென்றதாக வரலாறு இருக்கிறது. வெள்ளைக்காரன் கோட்டையைக் கட்டியது கூட மன்னன் வருவார் என்றுதான். கல்பிட்டி, கொட்டிகாரம், மட்டக்களப்பு ஆகிய இந்த மூன்றும் தான் கண்டி மன்னரின் கீழ் இருந்தது. ஏனைய துறைமுகங்கள் வெள்ளையரின் ஆட்சியின் கீழ் இருந்தன. ஒரு கட்டத்தில் மட்டக்களப்பையும் கைப்பற்றி விட்டார்கள். கண்டி மன்னருக்கு மிஞ்சிய பகுதி கல்பிட்டி, கொட்டிகாரம் தான் ஆகும். உப்பு, கருவாடு, உடைகள், ஆயுதங்கள் உணவு வகைகளை இந்தியாவில் இருந்து மன்னாருக்கும், உள்நாட்டு மக்களுக்கும் முஸ்லிம்கள்தான் கொண்டு வந்து கொடுப்பார்கள். பாக்கு போன்றவை இந்தியாவுக்கு கொண்டு செல்வார்கள். கல்பிட்டி ஒரு செழிப்பான பகுதி. அங்கு பெரிய களஞ்சியாசாலை இருந்தது. இடையில் புத்தளமும் இணைகிறது. புத்தளம் பெரிய பள்ளிவாசலுக்கு அருகில் சிறிய துறைமுகம் இருந்தது.

அங்கு இருந்து தான் கல்பிட்டிக்கு பொருட்கள் கொண்டு செல்லப்படும். கல்பிட்டிக் கோட்டை இறங்கு துறைக்குள் இருக்கிறது.

பள்ளிவாசல் துறைப் பாடசாலைக்கு அனஸ் சென்றார். 1929 ஆம் ஆண்டு பள்ளிவாசல் துறைப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1917 ஆம் ஆண்டு அவர் தந்தை பிறந்தார். அவர் தந்தை அங்கு படித்தாரா இல்லையா என்பது அவருக்குத் தெரியாது. அனஸ் தன் தந்தையிடம் கேட்கவே மறந்து விட்டார். அது பற்றி இன்று அவர் கவலைப்படுகின்றார்.

ஆனால் அவர் படித்தவர் என்று சொல்லித்தான் அவருக்கு விதானைப் பட்டம் கொடுத்தார்கள். ஊரில் ஐந்து பேர் சென்றார்கள். அவர் தெரிவு செய்யப்பட்டதற்கான காரணம்.

1929 ஆம் ஆண்டு இரு ஆசிரியர்களுடன் 20 க்கும் குறைவான மாணவர்களுடன் தொடங்கப்பட்ட பாடசாலையாகும். அப்பாடசாலையில் ஏழாம் வகுப்பு வரையும்தான் படிக்கலாம். ஆனால் அந்த ஊரில் ஆறாம் ஆண்டுடன் விலகி இடைநிலைக் கல்வி கற்பதற்காக கல்பிட்டி பாடசாலைககுச் செல்லும்



பழக்கம் இருந்தது. 1954 களில் அப்பாடசாலையில் ஆரம்ப பிரிவில் இருந்து கல்வி கற்றேன். புத்தளத்தைச் சேர்ந்த ஜெய்னுலாப்தீன் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். அக்கால கட்டத்தில் பாடசாலைகளுக்கு விடுதி இருக்கும். அவர் அங்கு தங்கியிருந்து அப்பாடசாலை முன்னேற்றுவற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

1967 இல் க. பொ. த சாதாரண தரம் வரை கல்வி கற்றார். யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கொழும்பு சாஹிராக் கல்லூரி ஆகிய பாடசாலையில் ஏதாவது ஒன்றில் கல்வி கற்பதற்கான தெரிவுகள் செய்திருந்திருந்தார்கள். ஆனாலும் அவர் தந்தை யாழ்ப்பாணம் தூரம் என்ற வகையில் 1968 இல் கொழும்பு ஸாஹிராக் கல்லூரிக்கு உயர் தரம் கல்வி கற்பதற்காக அனஸை சேர்த்தார். அப்பொழுது கொழும்பு சாஹிராக் கல்லூரி ஒரு கவர்ச்சிகரமாக பேசப்பட்டது. புத்தளம் கல்பிட்டி போன்ற பகுதிகளில் பேசப்பட்டன.அவர் அங்கு செல்லும் சமயம் கல்பிட்டியைச் சேர்ந்தவர்கள் 15 பேர் அளவில் கொழும்பு சாஹிராவில் கற்று வெளியேறியவர்கள் இருந்தார்கள். அவர்கள் பெரியளவில் கல்வியில் பிரபல்யமாகப் பேசப்படா விட்டாலும் 9, 10 வகுப்பு பிள்ளைகள் ஆங்கில அறிவோடு கற்று விட்டு வந்திருந்தார்கள். பணக்காரப் பிள்ளைகள் அங்குதான் சென்றார்கள். புத்தளத்திலுள்ளவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கற்றார்கள். நெயினா மரைக்கார் கூட கற்றார்.

அக்காலத்தில் ஆங்கிலக் கல்வி கல்பிட்டியிலும் இருந்தது. கிராமத்து மக்கள் ஆங்கிலம் தேவை என்று ஆசைப்பட்டு உருவாக்கினார்கள். எஸ். டப்பியூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கவின் ஆட்சி வரையிலும் இலங்கையிலுள்ள எல்லா சாஹிராக் கல்லூரிகளிலும் ஆங்கிலக் கல்வி போதிக்கப்பட்டன. கல்வி விடயத்தில் கல்பிட்டி மக்கள் தனித்துவமாக இயங்கியுள்ளார்கள். மத்திய பாடசாலையாக தரம் உயர்த்துவதற்கு உழைத்தார்கள். காலியில் இருந்து அப்துல் காதர் என்கின்ற ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் வந்துதான் அப்பாடசாலையை ஆங்கிலப் பாடசாலையாக மாற்றுகிறார். அவர் கல்பிட்டியை மாற்றுகிறார். எல்லாம் ஆசிரியர்கள், எல்லோரும் அரச உத்தியோகம் செய்யக் கூடியவர்கள் உருவாகினார்கள். கல்பிட்டி மக்களுக்கு தொழில் வாய்ப்பு இல்லை. பழைய கால வாழ்க்கை முறையிலான கலாசார சூழல் இல்லாமற் போய் விட்டது.


கொழும்பு சாஹிராவில் கல்வி கற்கும் போது அதிபர் மசூர் ஓய்வு பெற்றபின் சாபி மரைக்கார் புதிதாக அதிபர் பொறுப்பை ஏற்றார். உயர் தரம் கற்கின்ற மாணவர்களில் அனஸ் வகுப்பு மாணவர்கள்தான் முதல் பிரிவினர். ஆங்கிலத்திலும் தமிழ் பிரிவுகளிலும் மாணவர்கள் இருந்தனர். அதிபர் சாபி மரைக்கார் அவர்களுடைய பணிகளுக்கு அவர் வகுப்பு மாணவர்களுடன் சேர்ந்து அதிபரின் முயற்சிகளுக்கும் பெரும் பங்களிப்பு ஆற்றியுள்ளார்.

1970 இல் க. பொ. த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள். எல்லாப் பிரிவுகளில் இருந்தும் 15 பேர் அளவில் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டனர். அது நீண்ட இடைவெளிக்குப் பின் அப்படியான தொகை மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்றனர். அதில் அனஸ் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அது அதிபர் சாபி மரைக்கார் அவர்களுக்கு பெயரையும் புகழையும் ஈட்டிக் கொடுத்தது. பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் துறையில் ஆற்றிய பங்களிப்பும் கணிசமானதாகும். அதன் தலைவராகவும் அப்பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் மஜ்லிஸின் பெரும் பொருளாளராகவும் கிழக்கு தென்கிழக்கு பல்கலைக்கழகங்களில் மெய்யியல் துறையின் பாடவிதான ஆலோசகராகவும் பேராதனை பல்கலை என்ற ஆய்வு சஞ்சிகையின் பதிப்பாசிரியராகவும் பெரும் பங்களிப்பு ஆற்றியுள்ளார். அவர் 35க்கும் மேற்பட்ட நூல்களைத் தந்துள்ளார்.

இந்தக் கட்டுரையின் விவரிப்பு பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் என்னும் பேரறிஞனுடைய தகவலை முழுமையாக வெளிக்கொணர போதாதது. நாம் வெளியிடும் நூலில் அறிந்து கொள்ளலாம். ஆழ்ந்த அறிவு, பரபரப்பற்ற தன்மையும், தன்னைச் சூழவுள்ள எதிலும் கவரும் ஓர் ஒழுங்கமைதியைப் பேணும் ஒருவர். இவற்றின் கலைதான் பேராசிரியர் எம். எஸ். எம். அனஸுடன் இணைந்து பல இலக்கிய நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களில் இக்பால் அலியும் ஒருவர். அவருடன் இணைந்து அல்லாமா இக்பால் பற்றிய நிகழ்வுகளை நிறைய நடத்தியுள்ளார். அவர் திறன் மேலும் அறியப்படவும் அவர் ஆற்றல் மேலும் விவரிக்கப்படவும் நாம் வெளியிடும் நூலில் அறிந்து கொள்ளலாம்.

**இக்பால் அலி**

# யாழ் முஸ்லிம்களுக்காக அரும்பணியாற்றிய முன்னாள் எம்.பி சட்டத்தரணி ஆர்.எம்.இமாம்



இமாம் அவர்கள் யாழ்ப்பாணம் சோனகத் தெருவில் முதலாவது விதானையான (கிராம சேவகர்) மர்ஹூம் சுல்தான் அப்துல் காதர் அவர்களின் பேரனும் யாழ் ஒஸ்மானியா கல்லூரியின் முக்கிய ஸ்தாபகர்களில் ஒருவருமான மர்ஹூம் றஸீன் அவர்களின் மகனுமாவார்.

இமாம் யாழ்ப்பாணம் சோனகத் தெருவில் மர்ஹூம்களான றஸீன்_ஸபியா தம்பதியினருக்கு 27.09.1944 இல் மகனாகப் பிறந்தார்.

இமாம் அவர்களின் தந்தையும் ஒரு விதானையாவார். இமாம் தனது ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வியை யாழ் மத்திய கல்லூரியில் கற்றார். அதனைத் தொடர்ந்து கொழும்பு சட்டக் கல்லூரியில் கற்று சட்டத்தரணியானார். சட்டத்தரணி இமாம் மொஹிடீன் அப்துல் காதர்_ சுலைஹா உம்மா தம்பதியினரின் மகள் பதீனாவை திருமணம் புரிந்தார்.

இமாம் பதீனா தம்பதியினருக்கு 2 பெண் பிள்ளைகளும் மூன்று பேரப்பிள்ளைகளும் உள்ளனர்.

சட்டத்தரணி இமாம் தமிழரசு கட்சியில் அரசியல் குழுவில் இணைந்து முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார்.

அவர் 1978 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மாநகர சபை உறுப்பினரானார்.

அவர் யாழ் மாநகர சபை உறுப்பினராகவிருந்த காலத்தில் யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் அளப்பரிய சேவைகளைச் செய்தார். 2008 இல் முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் இமாம் அவர்கள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

யாழ் முஸ்லிம்களின் வரலாற்றில் இமாம் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த காலத்தில், 1990 இல் வெளியேற்றப்பட்டு புத்தளத்தில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கும் மீள் குடியேறிய யாழ் முஸ்லிம்களுக்கும் அளப்பரிய சேவைகளையாற்றினார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான இமாம் ஆற்றிய சேவையை பாராட்டி யாழ் முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பாலின் ஏற்பாட்டில் 2023 இல் 'யாழ் முஸ்லிம் சமூக ஜோதி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



அவர் தற்போது 79 வயது கடந்த நிலையில் தனது மனைவியுடன் தெஹிவளையிலுள்ள தனது மகளின் வீட்டில் வசித்து வருகிறார்.

கலாபூஷணம்
**பரீட் இக்பால்...✍**
யாழ்ப்பாணம்

# காங்கேசன்துறை துறைமுகத்தை மறுசீரமைக்கும் கருத்திட்டம்

## நிதி ஒப்பந்தக் கைச்சாத்திற்கு அமைச்சரவை அனுமதி

லோரன்ஸ் செல்வநாயகம்

இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் காங்கேசன்துறை துறைமுகத்தை மறுசீரமைக்கும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன் மொத்த மதிப்பீட்டுச் செலவையும் வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் உடன்பட்டுள்ளதுடன் அந்த நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கும் அதற்கான ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு, மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்,

இந்திய கடனுதவியுடன் காங்கேசன்துறை துறைமுகத்தை மறுசீரமைக்கும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2017 மே ஐந்தாம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், கருத்திட்ட முகாமைத்துவ ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக 2019 டிசம்பர் 18ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆலோசனை சேவை வழங்கும் நிறுவனத்தால் மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பீட்டுச் செலவானது குறித்த கடன் தொகையை விட அதிகரித்தமையால் கருத்திட்டத்தின் செயற்பாடுகளை எதிர்பார்த்தவாறு முன்னெடுத்துச் செல்வதற்கு முடியாதுள்ளது. அதற்கிணங்க அரச – தனியார் பங்குடமை பொறிமுறையின் கீழ் குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசுடன் மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு, அதன் ஒட்டுமொத்த மதிப்பீட்டுச் செலவையும் நிதியுதவியாக வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் உடன்பட்டுள்ளது.

குறித்த நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கும், அதற்கான ஏற்புடைய ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வடக்கு ஆளுநருடன் எரிக் சொல்ஹெய்ம் சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகரும், முன்னாள் நோர்வே வெளிவிவகார அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் வடமாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸை யாழ். நகரில் நேற்று முன்தினம் (30) மாலை சந்தித்து கலந்துரையாடினார்.

வடமாகாண ஆளுநரின் யாழ். உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

வட மாகாணத்தின் தற்போதைய நிலை, மீள்குடியேற்ற நடவடிக்கையின் முன்னேற்றம், எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகள், சுற்றாடல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

# தேசிய மக்கள் சக்தியின் மே தின கூட்டம் யாழில்




யாழ். விசேட நிருபர்

"நாட்டை கட்டியெழுப்பும் தீர்வுக்கு மக்கள் சக்தி ஓரணியில் திரள்வோம்" என்ற கோஷத்துடன் தேசிய மக்கள் சக்தியின் மே தின கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

அக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரம் தலைமையில் யாழ். மத்திய கல்லூரியில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் நேற்றைய தினம் காலை கூட்டம் நடைபெற்றது. நாட்டை கட்டியெழுப்பும் தீர்வுக்கு மக்கள் சக்தி ஓரணியில் திரண்டு, இன மத சாதி பேதமின்றி புதிய சுதந்திர போராட்டத்திற்காக போராடுவோம் என்ற கோஷத்தை முன்வைத்து உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக்காக, நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகள் சம்பந்தப்பட்ட அனைத்து உரிமைகளையும் வென்றெடுக்க தேசிய மக்கள் சக்தி தொழிலாளர் தினத்தில் அறை கூவல் விடுத்துள்ளது.

மேதின கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் தலைவி சரோஜா சாவித்திரி குகராஜ், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் யாழ் மாவட்ட செயலாளர் பிரகாஷ் உள்ளிட்டவர்களுடன், பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

### தனுஷ்கோடி கடல் வழியாக படகில்

# இலங்கைக்கு வர முயன்ற வவுனியா தம்பதிகள் கைது

## உதவியதாக இந்தியர் 08 பேரும் கைது

மன்னார் குறூப் நிருபர்

தனுஷ்கோடி கடல் வழியாக படகில் சட்டவிரோதமாக இலங்கைக்கு தப்பி வர முயன்ற இலங்கையைச் சேர்ந்த கணவன், மனைவி உட்பட தப்பிச் செல்ல உதவிய 08 பேரை கைது செய்த தமிழ்நாடு தங்கச்சிமடம் பொலிஸார் தீவிர விசாரணைக்குட் படுத்தியுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் வேதாளை பகுதியைச் சேர்ந்த சைபுல்லா நவீத், இம்ரான், நைனா முகமது, ரகுமான் உள்ளிட்ட நான்கு பேர் கடந்த 30ஆம் திகதி இரவு தங்கச்சி மடம் பஸ் நிலையத்தில் ஒன்று கூடினர்.

அவர்கள் நால்வர் மீதும் முன்னதாக இலங்கைக்கு ஆட்களை சட்டவிரோதமாக அனுப்பி வைத்த வழக்கு நிலுவையில் உள்ளதால் சந்தேகமடைந்த தங்கச்சிமடம் பொலிஸார் நால்வரையும் கைது செய்து விசாரணை நடத்தினர்.

வவுனியாவைச் சேர்ந்த கணவன், மனைவியான சாந்தி மற்றும் இராஜேஸ்வரன் இருவரும் கடந்த 2017 ஆம் ஆண்டு விமானம் மூலம் சென்னை வந்ததாகவும், சென்னையில் தங்கி இருந்த போது, மீண்டும் இலங்கைக்கு திரும்பிச் செல்ல முடியாததால் சென்னை புழல் பகுதியைச் சேர்ந்த வினோத்குமார் மற்றும் கணேசன் லிங்கம் ஆகியோரை தொடர்பு கொண்டு சட்டவிரோதமாக தனுஷ்கோடி கடல் வழியாக படகில் இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளனர். இதனையடுத்து இராஜேஸ்வரனிடம் பணத்தை பெற்றுக் கொண்ட கணேசலிங்கம் மற்றும் வினோத் குமார் இருவரும் வேதாளை பகுதியை சேர்ந்த நவீத் இம்ரானை தொடர்பு கொண்டு இலங்கைக்கு இருவரையும் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

இதையடுத்து இராஜேஸ்வரன், சாந்தி, கணேசலிங்கம், வினோத் குமார் ஆகிய நால்வரும் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னையிலிருந்து. புறப்பட்டு இராமேஸ்வரம் வந்து தங்கச்சிமடம் அடுத்துள்ள விடுதி ஒன்றில் தங்கி இருந்துள்ளனர். நேற்று (01) புதன்கிழமை இரவு தங்கச்சிமடம் கடற்கரையில் இருந்து நாட்டுப்படகில் புறப்பட்டு தனுஷ்கோடி கடல் வழியாக வவுனியாவுக்கு தப்பி வர திட்டமிட்டது விசாரணையில் தெரிய வந்ததையடுத்து தம்பதிகள் இருவர் மற்றும் தப்பிச் செல்ல உதவிய ஆறு பேர் என மொத்தம் எட்டு பேரை தங்கச்சி மடம் பொலிஸார் கைது செய்தனர்.

எட்டு பேரிடம் மத்திய, மாநில உளவுத்துறை, கரையோர பொலிஸார் மற்றும் சட்ட ஒழுங்கு பொலிஸார் அடுத்தடுத்து தனித்தனியாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைக்கு பின்னர் 08 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவுள்ளதாக தங்கச்சிமடம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### கண்டியிலிருந்து யாழ். நகர் சென்ற நபர் பஸ் ஆசனத்திலேயே மரணம்

சாவகச்சேரி விசேட நிருபர்

கண்டியிலிருந்து யாழ். நகர் நோக்கி அரச பஸ்சில் பயணித்த நபர் ஒருவர் (30) செவ்வாய்க்கிழமை பிற்பகல் பஸ்சின் ஆசனத்திலேயே மரணித்த சம்பவம் ஒன்று சாவகச்சேரி நகரை அண்மித்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது;

மேற்படி நபர் கண்டியிலிருந்து யாழ்பாணம் நோக்கி பஸ்சில் பயணம் செய்துள்ளார். இதன்போது மேற்படி நபர் நீண்ட நேரம் அசைவற்றுக் காணப்பட்டதால் சந்தேகமடைந்து அவரை பரிசோதித்த நடத்துனர் மற்றும் சாரதி, உடனடியாக அருகில் இருந்த சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்த்தனர்.

அவரை பரிசோதித்த வைத்தியர்கள் ஏற்கனவே அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். உயிரிழந்த நபர் தொடர்பான விபரங்கள் எவையும் இல்லாமையால் அவரை அடையாளம் காண முடியவில்லையென பொலிஸார் தெரிவித்தனர். சுமார் 65 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# குழந்தைப் பேறின்மையும் அதற்கான அதி நவீன சிகிச்சைகளும்

வெள்ளவத்தை ரோயல் மருத்துவமனையின் மகப்பேற்று குறைபாடுகளுக்கான இலவச மருத்துவ முகாம் இம்மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பிலும் மறுதினம் 19ஆம் திகதி ஞாயிறன்று கண்டியிலும் நடைபெறவுள்ளது. இந்த முகாமில் கலந்து கொண்டு, குழந்தையின்மைக்கு முகங்கொடுத்திருக்கும் தம்பதியருக்கு இலவச ஆலோசனை வழங்கவிருக்கிறார் உலகப் புகழ்பெற்ற செயன்முறைக் கருத்தரிப்பு சிகிச்சை நிபுணர் டொக்டர் கீதா ஹரிப்ரியா. சென்னை, சேத்துப்பட்டில் இயங்கிவரும் பிரசாந்த் செயன்முறைக் கருத்தரிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைமை மருத்துவர் இவர்.குழந்தையின்மை மற்றும் அதற்கான காரணிகள் குறித்து அவர் பின்வருமாறு கருத்து தெரிவித்தார். அதாவது, குழந்தையின்மைக்குப் பல குறைபாடுகள் இருந்தாலும் வயது ஒரு மிக முக்கிய காரணம். இலங்கைப் பெண்கள் குறிப்பாகத் தமிழ்ப் பெண்கள் அதிலும் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த பெண்கள் முப்பது வயதுக்கு மேலேயே திருமணம் செய்து கொள்வதை என்னைச் சந்திக்க வரும் தம்பதியரை வைத்துப் புரிந்துகொள்கிறேன்.

முன்னைய காலங்களில் முப்பத்தைந்து வயதுக்குள்ளான பெண்களுக்கு மகப்பேறுக்கான அறிகுறிகள் எதுவும் இல்லாதவிடத்து பரிசோதனைகள் செய்து கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால், இன்று அப்படியல்ல. 28 வயதே ஆன பெண்களாக இருந்தாலும் சரி, திருமணமாகி ஒரு வருடத்துக்குள் குழந்தைப் பேற்றுக்கான அறிகுறி இல்லாதவிடத்து பரிசோதனை செய்துகொள்ளவேண்டும் என, குழந்தையின்மைக்கான சிகிச்சைத் துறை அறிவுறுத்துகிறது. வெகுவாக மாறியிருக்கும் வாழ்க்கை முறையே இதற்குக் காரணம்.

பொதுவில், பெண்கள் தமது முதல் குழந்தையை 23 வயதிலும் இரண்டாவது குழந்தையை 28 வயதுக்குள்ளும் பெற்றுக்கொண்டுவிட வேண்டும். ஆகக் கூடியது 30 வயதுக்குள் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். காரணம், அதன் பின் அவர்களது கருமுட்டைப் பையில் இருந்து வெளியாகும் முட்டைகளின் தரம், அதற்கு முன்பிருந்தது போல இருக்காது என்பதே.

20 28 வயதுப் பருவத்தில் 100 சத வீதமாக இருக்கும் கருமுட்டையின் தரம், அதன் பின் படிப்படியாகக் குறைந்து 35 வயதை நெருங்கும்போது 50 சத வீதமாகவும், 40 வயதை அடையும்போது 10 சதவீதமாகவும் 42 வயதில் 5 சதவீதமாகவும் குறைந்துவிடுகிறது. எனவே, 30 வயதுக்குள் இயற்கையாகவே குழந்தைப்



பேறு வாய்க்காதவர்கள், அடுத்தபடியாக மகப்பேற்றுக்கான பரிசோதனைகளைச் செய்துகொள்ள வேண்டும்.

இன்னும் சில பெண்களுக்கு 'எண்டோமெட்ரியோசிஸ்' மற்றும் 'சொக்லெட் சிஸ்ட்' எனப்படும் இரத்தக் கட்டிகளின் பாதிப்பும் இருக்கும். இளம் வயதில் மகப்பேறின்மைக்கு முகங்கொடுக்கும் பெண்களில் பலருக்கும் இது பொதுவான காரணியாக விளங்குகிறது.

இந்த இரத்தக் கட்டிகள் கருமுட்டை வளரும் பகுதிகளில் படர்ந்து முட்டை வளர்ச்சியை அழிக்கிறது. எனவே, இது போன்ற காரணிகள் இருப்பவர்களுக்கு, வயதுப் பிரச்சினையும் சேர்ந்துகொண்டால் அவர்களின் கருமுட்டை உற்பத்தி பாதிக்கப்படுவதுடன், தரமற்ற முட்டைகளே உருவாகவும் வாய்ப்பு ஏற்படும்.

எனவே, முப்பது வயதுகளுக்குள் குழந்தை பிறக்கும் வாய்ப்பு இல்லாமல் போகும் பட்சத்தில், செயன்முறைக் கருத்தரிப்பு மூலம் குழந்தை பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், காலத்தை நீங்கள் தள்ளிப் போடத் தள்ளிப்போட, தாய்மைக்கான வாய்ப்பும் உங்களை விட்டுத் தள்ளிப் போய்க் கொண்டே இருக்கும்.சரி.... செயன்முறைக் கருத்தரிப்பு மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள முடிவெடுத்துவிட்டீர்கள். அடுத்து என்ன செய்ய வேண்டும்? உங்களுக்குப் பொருத்தமான மருத்துவர் மற்றும் மருத்துவமனையை அடையாளம் கண்டு, அவரின், அந்த மருத்துவமனையின் உதவியுடன் உங்கள் கனவை நனவாக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

நீங்கள் தெரிவுசெய்யும் மருத்துவமனையில் என்னென்ன சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன, அதற்காக என்னென்ன உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன, அந்த மருத்துவமனையின் குழந்தை பிறப்புக்கான சாத்தியக்கூறின் சதவீதம் என்ன, அந்த மருத்துவமனையில் எத்தனை குழந்தைகள் பிறந்திருக்கின்றன, அம்மருத்துவமனை பற்றிய பொதுமக்களின் அல்லது சிகிச்சை பெற்றவர்களின் அபிப்பிராயம் என்ன என்பனவற்றின் அடிப்படையில் நீங்கள் உங்களுக்கான மருத்துவமனையைத் தெரிவுசெய்துகொள்ள வேண்டும்.

குறிப்பாக, செயன்முறைக் கருத்தரிப்பு சிகிச்சைத் துறையில் உலகளாவிய ரீதியில் அறிமுகமாகியிருக்கும் 'எம்ப்ரியோஸ்கோப்', 'எம்ப்ரியோ க்ளூ' மற்றும் ஆண்களின் மகப்பேற்றுக் குறைபாட்டைத் தீர்ப்பதற்காக அறிமுகமாகியிருக்கும் '40 எக்ஸ் ஸூம்' போன்ற அதிநவீன அம்சங்கள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அடுத்து, நீங்கள் தெரிவுசெய்யும் மருத்துவரின், 'எம்ப்ரியோலஜிஸ்ட்' எனப்படும் மருத்துவ விஞ்ஞானியின் அனுபவம் குறித்தும் நீங்கள் அவதானம் செலுத்த வேண்டும்.

செயன்முறைக் கருத்தரிப்பு செய்து கொள்ளும் அல்லது செய்துகொள்ள விரும்பும் தம்பதியினருக்கு, 'எனது முட்டை / உயிரணு தான் பயன்படுத்தப்படுகிறதா?' என்ற சந்தேகம் எப்போதும் இருக்கும். அதைத் தவிர்ப்பதற்கு, ஒவ்வொரு சிறு சிறு பணிகளுக்கும் பிரத்தியேக தாதியர் / ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி இருக்கும் பட்சத்தில் எக்காரணம் கொண்டும் இந்தத் தடுமாற்றங்கள் நிகழ வாய்ப்பே இருக்காது.

சில தம்பதியர் தத்தமது பொருளாதார எல்லைகளுக்கு உட்பட்டுச் சிந்திப்பார்கள். அவர்களுக்காகவே குறைந்த செலவிலான ஐ.வி.எஃப். சிகிச்சை முறையும் இருக்கிறது. ஆனால், வயது மற்றும் அவர்களுக்கு இருக்கும் குறைபாடுகளுக்கு ஏற்பவே அதைத் தெரிவுசெய்துகொள்ள முடியும்.

வெள்ளவத்தை ரோயல் மருத்துவமனை நடத்தும் இலவச மருத்துவ முகாம் மட்டக்களப்பிலும் கண்டியிலும் நடைபெறுகிறது. நீங்கள் ஏற்கனவே இலங்கையில் மகப்பேறின்மைக்கான பரிசோதனைகளைச் செய்திருந்தால் அந்த அறிக்கைகளுடன் என்னை வந்து சந்திக்கலாம். உங்களுக்குப் பொருத்தமான சிகிச்சை முறைகள் பற்றி அறியத் தருகிறேன்.

ஒருவேளை இன்னும் எதுவிதமான பரிசோதனைகளும் செய்யாதவர்களாக இருந்தால் கூட, நீங்கள் செய்துகொள்ள வேண்டிய பரிசோதனைகள் குறித்தும் விளக்குகிறேன். அவற்றைச் செய்து உரிய மருத்துவ ஆலோசனை பெற்றுக்கொண்டால், உங்கள் வீட்டிலும் வெகுவிரைவில் குழந்தையின் மழலைச் சத்தம் கேட்கும்.

மேற்படி முகாம்களில் கலந்துகொள்ள விரும்புவர்கள் 07601 55882 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு தமது வருகையை உறுதிசெய்துகொள்ளலாம்.

"எப்போதும் நான் கூறும் ஒரு வாக்கியத்தையே திரும்பவும் உங்களுக்குச் சொல்கிறேன். முயன்றால் உங்களுக்கும் குழந்தை நிச்சயம் உண்டு. நம்பிக்கை வையுங்கள். நல்லதே நடக்கும்."

# தமிழரின் இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தமே ஒரே தீர்வு

## தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஓரணியில் திரள்வதும் அவசியம் – எரிக் சொல்ஹெய்ம்

யாழ். விசேட நிருபர்

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டமே தீர்வாக அமையும். அதனை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டுமென ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். யாழ். அல்லைப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள கடலுணவு உற்பத்தி நிலையத்துக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விஜயம் மேற்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பொருளாதார சமூக சுற்றாடல் தொடர்பில் நேரில் ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ளேன். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதான நடவடிக்கையில் ஒருவனாக செயற்பட்டவன், மீண்டும் யாழ்ப்பாணம் வந்துள்ளேன்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு, மக்கள் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமாயின், சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லீம்கள் என்ற வேறுபாடுகளின்றி அனைவரும் ஓரணியில் செயற்பட வேண்டும்.

# 1700 ரூபா சம்பள உயர்வு; தொழிலாளர் வர்க்கத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றி

## ஜனாதிபதிக்கு ரவிக்குமார் நன்றி தெரிவிப்பு



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கடுமையான போராட்டங்களின் ஊடாக தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளமை உண்மையில் தொழிலாளர் வர்க்கத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றி என புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் என். ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

குறுகிய காலத்தில் இந்த செயல்பாட்டை வெற்றிகரமாக்க ஒத்துழைத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் அவர் கூறினார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சொல்வதை மட்டும் தான் செய்யும் என்பதுடன் செய்வதை மட்டும் தான் சொல்லும் என்பதனை அதன் தற்போதைய தலைவர் செந்தில் தொண்டமான் நிரூபித்துள்ளார் எனவும் ரவிக்குமார் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். பலர் சம்பளத்தை காங்கிரஸ் வாங்கிக் கொடுக்காது என கூறினர்.

ஆனால், கடுமையான போராட்டத்தின் ஊடாக சம்பள உயர்வை காங்கிரஸ் பெற்றுக்கொடுத்துள்ளது. இந்த சம்பள உயர்வு பேச்சு வார்த்தைக்கு பல தொழிற்சங்கங்களும் பல சமூக அமைப்புகளும் உதவி செய்தன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, தொழில் அமைச்சர் மனுச நாணயக்கார ஆகியோருக்கு இத்தருணத்தில் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மே தின கூட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று (01) காலை இடம்பெற்றது. நல்லூர் ஆலயத்திற்கு அருகில் இருந்து ஆரம்பித்த பேரணி நல்லூர் கிட்டு பூங்காவில் நிறைவடைந்து அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், ஆசிரியர் சங்க பிரதிநிதிகள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(படம்: யாழ். விசேட நிருபர்)





ஸ்ரீல.சு.கட்சியின் மே தின நிகழ்வு நேற்று கம்பஹாவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

# பருத்தித்துறையில் ஈ.பி.டி.பியின் தொழிலாளர் தின நிகழ்வுகள்





**கரவெட்டி தினகரன் நிருபர்**

உலக தொழிலாளர் தினத்தினை முன்னிட்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நேற்றைய தினம் (01) மே தின நிகழ்வுகளை பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் நடாத்தியது.

இந்நிகழ்வுக்கு பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் கட்சியின் ஊடக பேச்சாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தலைமை தாங்கினார்.

மேதின நிகழ்வுகளில் ஒரு அங்கமாக யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலக முன்றலிலிருந்து அழைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்களின் பிரசன்னத்துடன் வாகனப் பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதி வழியாக பருத்தித்துறை நகரை வந்தடைந்தது.

இதேநேரம், மற்றொரு வாகன பேரணி கட்சியின் சாவகச்சேரியிலுள்ள பிரதேச அலுவலக முன்றலிலிருந்து பேரெழுச்சியுடன் ஆரம்பித்து பருத்தித்துறையை நோக்கி வந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் உழைப்பாளர் தின செய்தி வாசிக்கப்பட்டதுடன் உறுதியும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

# கொழும்பு விண்ட்சே பாடசாலையில் இஸ்லாமிய தின நிகழ்வு



**ருஸைக் பாரூக்**

கொழும்பு 3, விண்ட்சே பெண்கள் பாடசாலையின் இஸ்லாமியச் சங்கம் ஒழுங்கு செய்த வருடாந்தம் "அல் மவாஹிப் அல் இஸ்லாமியா" இஸ்லாமிய தின விருது வழங்கும் வைபவம் பாடசாலை பிரதான மண்டபத்தில்

பாடசாலை அதிபர் திருமதி நயோமி தசநாயக்க தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தின் மனித வள முகாமைத்துவ திணைக்களத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ருவைஹா ராசிக் பிரதம அதிதியாகவும் இஹ்ஸானிய்யா அரபிக் கல்லூரி அதிபர் அஷ் ஷெய்க் எம்.எப்.எம். பரூத் சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டார்.

இஸ்லாமிய சங்கத்தின் தலைவி மநால் சூரி வரவேற்புரை ஆற்றினார். மாணவர்களின் உரை, நாடகம், பாடல் மற்றும் கஸீதா போன்றவையும் இடம்பெற்றன.

மேலும் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் பிரதம அதிதி மற்றும் சிறப்புப் பேச்சாளர் இடம் இருந்து விருதுகளை பெற்று கொண்டனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2024.04.30
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5461
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,124,268.00
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 7 1 8 7 3 7

**அத சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 036
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 8 7 3 7

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3703
சீட்டிழுப்பு திகதி 2024.04.30
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,513,282.96
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 06 32 39 42
விசேட எழுத்து E
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 50412

**Mega Power**
சீட்டிழுப்பு இலக்கம் 1809
2024.04.30
06801
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 431,059,046.00
ஆங்கில எழுத்து B
சுப்பர் இலக்கம் 18
வெற்றி இலக்கங்கள் 23 56 57 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**VIP**
திகதி 2024.04.30
சீட்டிழுப்பு இலக்கம் 0287
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 3 2 6 9 8 5
L7 எழுத்து N
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 29,090,277.28

**ராசி சுப பலன்**
திகதி 2024.04.30
சீட்டிழுப்பு இலக்கம் 770
செவ்வாய்
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,002,394.80
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 09 25 37 44
தனயோக இலக்கம் 58669
நாளுக்கான விதி எண் 13

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1491
2024.04.30
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 90,184,061.12
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 35 36 41 65
விசேட எழுத்து S
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 12846

## களனிப் பல்கலைக்கழகம் - இலங்கை

## வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக 2024-05-17ஆம் திகதி வரை என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**கணனி மற்றும் தொழில்நுட்ப பீடம்**

**பிரயோகக் கணனி கல்விப் பிரிவு**

விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

**கணனி முறைமை பொறியியல் கல்விப் பிரிவு**

விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

முறைமை பகுப்பாய்வு நிரலாளர் (Programmer Cum System Analyst) IIஆம் தரம்

**மருத்துவ பீடம்**

**நோயியல் கல்விப் பிரிவு**

விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

**சத்திரசிகிச்சை கல்விப் பிரிவு**

விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

**மானுடவியல் பீடம்**

**அழகியற்கலை கல்விப் பிரிவு**

விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

**நிர்வாகப் பிரிவு**

பிரதான ஒழுக்கக்காப்பாளர் (Chief Marshal)

மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பதவிக்காவும் சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள் மற்றும் இயைபுடைய சகல தகவல்களையும் https://www.kln.ac.lk/vacancies ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**சம்பள அளவு**

1. **விரிவுரையாளர் (பயிலுநர்)**
   ரூபா 54,600 – 10 x 1,335 - 67,590 (*U-AC 3 (IV)*
   (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 181,054.00)
2. **விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத)**
   ரூபா 69,580 – 5 x 1,630 – 77,730 p.m.
   (*U-AC 3 (II)* (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 239,760.20)
3. **சிரேஷ்ட விரிவுரையாளர் -** II
   ரூபா 79,360 – 11 x 1,630 – 97,290 p.m.
   (*U-AC 3 (II)* - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 290,798.40)
4. **சிரேஷ்ட விரிவுரையாளர் -** I
   ரூபா 91,310 – 7 x 2,170 – 106,500 p.m.
   (*U –AC 3 (I)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 331,906.40)
5. **பிரதான ஒழுக்கக்காப்பாளர்** (Chief Marshal)
   ரூபா 66,180–8x1335; 8x1630–89,900 p.m.
   (U-EX 2 (II) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 131,000.00)
6. **முறைமை பகுப்பாய்வு நிரலாளர்** (Programmer Cum System Analyst) IIஆம் தரம்
   ரூபா 50,625-3x1335-54,630(EB)55,965-14x1335-74,655 p.m.
   (*U-AS 2 (II)*- (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 106,000.00)

**விண்ணப்பிக்கும் முறை**

இந்த பதவியின் பொருட்டான விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை அலுவலக நேரத்தினுள் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ கல்வி நிறுவனங்கள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறே https://www.kln.ac.lk/vacancies எனும் பல்கலைக்கழக இணையதளத்திற்குப் பிரவேசித்து உரிய விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தரவிறக்கம் (Downloads) செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தபாலில் பெற வேண்டுமானால் அதற்கான வேண்டுகோளொன்றுடன் முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23x10 செ.மீ. அளவான கடித உறையொன்றை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவியின் பொருட்டும் தனித்தனியான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரர் உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2024-05-17ஆம் திகதி அல்லது அதற்கு முன் பிரதிப் பதிவாளர் / கல்வி நிறுவனங்கள், களனிப் பல்கலைக்கழகம், களனி எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி, திணைக்களம் மற்றும் மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பத்தை அனுப்பும்போது தலைப்பு (Subject) குறிப்பிடப்படும் நிரலில் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் திணைக்களம் என்பன குறிப்பிடல் வேண்டும். பூரணமற்ற, தெளிவற்ற மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**கணனி மற்றும் தொழில்நுட்ப பீடம் - applyct@kln.ac.lk**
**மருத்துவ பீடம் - applyme@kln.ac.lk**
**மானுடவியல் பீடம் - applyhu@kln.ac.lk**
**பிரதான ஒழுக்கக்காப்பாளர் - aead@kln.ac.lk**
**முறைமை பகுப்பாய்வு நிரலாளர் - aead@kln.ac.lk**

அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச்சபை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை குறும்பட்டியலிடும் முழுமையான உரிமையை பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**பதிவாளர்**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**களனி.**
**2024-05-02**

## மெனிக்கின்ன ஆதார வைத்தியசாலை;

## பக்கச்சார்பற்ற விசாரணைக்கு மாகாண ஆளுநர் பணிப்பு



**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டி, மெனிக்கின்ன ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அழைத்து வந்த நோயாளர் தரப்பிற்கும், வைத்தியசாலை தரப்பிற்கும் இடையே இடம் பெற்ற மோதல் தொடர்பாக பக்கச் சார்பற்ற நேர்மையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் 7 பேர் இருதரப்பிலும் காயமடைந்து கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

அதன் போது வைத்தியசாலை தரப்பினர் கடமை நேரத்தில் போதையில் இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு வரும் நிலையில் ஆளுநர் மேற்படி உத்தரவை வழங்கியுள்ளார்.

சுகாதார பிரிவிற்கும், பொலிஸாருக்கும் மேற்படி உத்தரவை ஆளுநர் வழங்கியுள்ளதாக ஆளுநர் காரியாலயம் தெரிவிக்கிறது.




# முகத்துவாரம் பிரதேசத்திலிருந்து 1229 கிலோ பீடி இலைகள் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கற்பிட்டி முகத்துவாரம் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒருதொகை பீடி இலைகள் நேற்று முன்தினம் (30) கைப்பற்றப்பட்டுள்ளன.

எனினும், இந்த சம்பவத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை என கடற்படையினர் குறிப்பிட்டனர்.

புத்தளம் பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவினருடன் இணைந்து கடற்படையினரும், இராணுவத்தினரும் கூட்டாக சேர்ந்து குறித்த பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

முகத்துவாரம் பிரதேசத்தில் சந்தேகத்திடமான முறையில் மறைத்து வைக்கப்பட்ட உர மூடைகளை சோதனை செய்துள்ளனர்.

இதன்போது, 39 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 1229 கிலோ கிராம் பீடி இலைகள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் விநியோகிக்கும் நோக்கில் குறித்த பீடி இலைகள், கடல்மார்க்கமாக கொண்டுவரப்பட்டிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கடற்படையினரால், கைப்பற்றப்பட்ட 1229 கிலோ கிராம் பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB)**

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கம் |
|---|---|
| 1. | மத்திய அதிவேக வீதியில் மீரிகம முதல் குருநாகல், யக்கஹபிட்டிய வரையான பகுதிக்கு தகவல் தொழில்நுட்ப வேலைகளுக்காக தகைமை வாய்ந்த பயிற்சிபெற்ற தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் - RDA/EOM&M/IT/CE/TECH/2024 /15 |

மேற்கூறப்பட்ட பெறுகைக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 மே மாதம் 02ஆம் திகதி முதல் 2024 மே மாதம் 27ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், அதிவேக வீதி பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**

---

## இலங்கை மக்களிடம் மன்னிப்பு கோருதல்

பெத்தேகம, பமுனகொட்டுவயில் அமைந்துள்ள ரசோதா டெரிஸ் பிரைவட் லிமிடெட் நிறுவனம் தொடர்பானது.

மேற்கூறிய நிறுவனத்தின் இரண்டு உற்பத்திகளில் அடங்கியுள்ள சீனி, உப்பு, கொழுப்பு அளவுகளுக்கு இயைபான நிறங்கள் பொதிகளின் குறிப்பிடப்படாத குற்றம் தொடர்பில் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் 76256ஆம் இலக்கத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய குற்றச்சாட்டின் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் கௌரவ நீதிமன்றம் 2023-11-03ஆம் திகதி நிறுவனத்திற்கு பதினெட்டாயிரம் ரூபா (18,000.00) அபராதம் விதிக்கப்பட்டதாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

இது பழைய பொதிகள் இருந்தால் ஏற்பட்ட தவறு என்பதுடன் புதிய பொதிகளில் அதை சரிசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகின்றது.

---

# கற்பிட்டி அல் அக்ஸாவில் சா/த இறுதிக் கருத்தரங்கு

**புத்தளம் தினகரன் நிருபர்**



கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இம்முறை சாதாரண தர பரீட்சை எழுத உள்ள மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர் நிலைக்கு கொண்டு செல்லும் நோக்கோடு பாட ரீதியாக தொடராக இடம்பெற்ற இலவச தொடர் கருத்தரங்குகளின் இறுதியாக சித்திரப் பாட மட்ட செயலமர்வு செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்றது

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இறுதிச் செயலமர்விற்கான அனுசரணையை 2000ஆம் ஆண்டு சாதாரண தர பழைய மாணவர்கள் வழங்கி இருந்தனர் .

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பழைய மாணவரும் 1991ம்

ஆண்டு தொடக்கம் சுமார் 10 வருடங்கள் அல் அக்ஸா தேசிய பாடசாலையில் சித்திர பாட ஆசிரியராக பணியாற்றியவரும், தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் விரிவுரையாளரும், கல்வி அமைச்சின் சித்திர பாட சிரேஷ்ட வளவாளராகவும், சித்திரப் பாட ஆசிரிய ஆலோசகராகவும் செயல்பட்டு வரும்

எம்.எம். மொஹமட் ஆசிரியரால் இறுதி கருத்தரங்காக சித்திர பாட செயலமர்வு நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

## தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136ஆம் அத்தியாயமாகிய) 33(1) (அ) ஆம் பிரிவின் கீழ், தொழில் அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதிய 2381/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான கட்டளையின் வாயிலாக எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைக் கொண்டு, தொழில் ஆணையாளர் நாயகம் எச். கே. கே. ஏ. ஜயசுந்தர ஆகிய நான், தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் தொடர்பாக கீழ்க் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக் குறைந்த சம்பள அளவினை அக்கட்டளைச் சட்டத்தின் 33(2) ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என அக்கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2024 ஆம் ஆண்டு மே மாதம் 15ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்து மூலம் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்கள் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**எச்.கே.கே.ஏ. ஜயசுந்தர**
**தொழில் ஆணையாளர் நாயகம்**

**"மெஹெவர பியெச"**
**தொழில் திணைக்களம்**
**கொழும்பு 05.**
**2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆந் திகதி**

**அட்டவணை**

தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1945ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் திகதிய 9441 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவுமான முடிவுகள் 2021 மார்ச் மாதம் 05 ஆம் திகதிய 2217/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிவுகள் 11 ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படல் வேண்டும்.

**பகுதி 1**

**தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்களுக்கான கொடுப்பனவு நடைமுறை**

| இலக்கம் | விவரணம் | கொடுப்பனவு |
|---|---|---|
| I. | நாளாந்தச் சம்பளம் (இத் தொகை நாளாந்த வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்குகின்றது என்பதுடன் ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. கொடுப்பனவிற்கும் ஏற்புடையதாகும்) | ரூபா.1350.00 |
| II. | நாளாந்த விசேட படி | ரூபா.350.00 |
| III. | நாளாந்த மொத்தக் கொடுப்பனவு | ரூபா.1700.00 |
| IV. | மேலதிக கிலோ கிராமிற்கான விகிதம் | ரூபா.1350.00 |

---

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

## அறிவித்தல்

## இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபை

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயமாகிய) 33(1) (அ) ஆம் பிரிவின் கீழ், தொழில் அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதிய 2381/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான கட்டளையின் வாயிலாக எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைக் கொண்டு, தொழில் ஆணையாளர் நாயகம் எச். கே. கே.ஏ. ஜயசுந்தர ஆகிய நான், இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் தொடர்பாக கீழ்க்காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த சம்பள அளவினை அக்கட்டளைச் சட்டத்தின் 33(2) ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என அக்கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2024 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்து மூலம் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்கள் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**எச்.கே.கே.ஏ.ஜயசுந்தர**
**தொழில் ஆணையாளர் நாயகம்**

**"மெஹெவர பியெச"**
**தொழில் திணைக்களம்**
**கொழும்பு 05,**
**2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆந் திகதி**

**அட்டவணை**

இறப்பர் வளர்த்தல் மற்றும் உற்பத்தி செய்தல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்ட முடிவுகள் 1949ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதிய 10047ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவுமான முடிவுகள் 2021 மார்ச் 05ஆம் திகதிய 2217/37ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிவுகள் 11 ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுதல் வேண்டும்.

**பகுதி 11**

**இறப்பர் வளர்த்தல் மற்றும் உற்பத்தி செய்தல் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்களுக்கான கொடுப்பனவு நடைமுறை**

| இலக்கம் | விவரணம் | கொடுப்பனவு |
|---|---|---|
| I | நாளாந்தச் சம்பளம் (இத் தொகை நாளாந்த வரவு செலவுத்திட்ட நிவாரணப்படியை உள்ளடக்குகின்றது என்பதுடன் ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. கொடுப்பனவிற்கு ஏற்புடையதாகும்) | ரூபா.1350.00 |
| II | நாளாந்த விசேட படி | ரூபா.350.00 |
| III | நாளாந்த மொத்தக் கொடுப்பனவு | ரூபா.1700.00 |
| IV | மேலதிக கிலோ கிராமிற்கான விகிதம் | ரூபா.80.00 |

---

# விமானப்படை வீரரின் துப்பாக்கி தவறுதலாக வெடிப்பு

## விமான நிலைய கூரைக்கு சேதம்; படைவீரர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த விமானப்படை வீரர் ஒருவரின் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததால் கூரைப் பகுதி சேதமடைந்துள்ளதாக விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த துப்பாக்கிச் சூட்டு அனர்த்தத்தினால் எவருக்கும் எந்தவித காயங்களோ, ஏனைய பாதிப்புகளோ ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் முற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தின் பிரபுக்கள் முனையத்தில் உத்தியோகபூர்வ கடமையில் ஈடுபட்டிருந்த விமானப்படை வீரர் ஒருவரின் டி 56 ரக துப்பாக்கி தவறுதலாக வெடித்துள்ளது.

அதனால் அந்த முனையத்தின் கூரைப் பகுதி சேதமடைந்துள்ளதாகவும் எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் துப்பாக்கி வெடித்துள்ளமை காரணமாக மேற்படி விமானப்படை உத்தியோகத்தர் விமானப்படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

## விலைக்கோரல் அறிவித்தல்

**காசல் வீதி மகளிர் வைத்தியசாலை**

1. பிரதான சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் 2024
2. மருத்துவர் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் 2024

**2024ஆம் வருடத்தில் ஒரு வருட காலத்திற்கு பிரதான சிற்றுண்டிச்சாலை மற்றும் மருத்துவர் சிற்றுண்டிச்சாலை சேவையை நடாத்திக் கொண்டு செல்வதற்காக இதில் தகைமையைக் கொண்டுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. இது தொடர்பில் ஆர்வம் காட்டுபவர்கள் விலைமனு ஆவணக் கட்டணமாக பிரதான சிற்றுண்டிச்சாலைக்கு 2500.00 ரூபா மற்றும் மருத்துவர் சிற்றுண்டிச்சாலைக்கு 250.00 ரூபா தொகையை மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு சகிதம் தமது ஆளடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2024-05-02ஆம் திகதி முதல் 2024-05-21ஆம் திகதி வரையான பொதுவான கடமை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் பெறுகைப் பிரிவிலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. பிரதான சிற்றுண்டிச்சாலைக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் விலைக்கோரல் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பிரதான சிற்றுண்டிச்சாலை சேவை வழங்குதல் 2024'' எனவும் மருத்துவர் சிற்றுண்டிச்சாலைக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் விலைக்கோரல் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மருத்துவர் சிற்றுண்டிச்சாலை சேவை வழங்குதல் 2024'' எனக் குறிப்பிட்டு 2024-05-22ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், வைத்தியசாலை பெறுகைக் குழு, காசல் வீதி மகளிர் வைத்தியசாலை, கொழும்பு-08'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
3. விலைக்கோரல் ஆவணங்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.
5. விலைமனு ஆவணங்களை இலவசமாக காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் நிதி முகாமைத்துவப் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. அரசாங்க ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு விலைமனுப் படிவங்கள் வழங்கப்பட மாட்டாது.
7. குறித்த விண்ணப்பங்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
8. மேலதிக விபரங்களுக்கு காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் கணக்காளரைத் (011-2679731) தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**காசல் வீதி மகளிர் வைத்தியசாலை,**
**கொழும்பு-08.**

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**கைத்தொழில் அமைச்சு**

**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்**

**SUPPLY AND DELIVERY OF SPARE PARTS FOR WARMAN PUMPS TO PLANT AT PULMODDAI**

**BID REFERENCE -LMSL/SUP/DPC/06/2024**

1. கீழே விபரிக்கப்பட்டவாறு தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

| இல. | விலைமனு இல. | பொருட்களின் விளக்கம் | ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) (ரூபாவில்) | விலைமனுப் பிணை (ரூபாவில்) | விலைமனுப் பிணை செல்லுபடியாகும் காலம் | விலைமனு செல்லுபடியாகும் காலம் | விலைமனு திறத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | LMSL/SUP/ DPC/ 06/ 2024 | Supply & delivery of spare parts for Warman Pumps to Plant at Pulmoddai | 4,000.00 | 100,000.00 | 2024.08.01 ஆம் திகதியன்று வரையும் | 77 | 2024.05.22 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு |

3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இராஜகிரிய, சரணமாவத்தை, 341/13, ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட், வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்று 2024.05.02 ஆம் திகதியிலிருந்து 2024.05.21 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. தொடர்பிலக்கங்கள்: 011-2883972, 2883951, 2883952.
5. 2024.05.02 ஆம் திகதியிலிருந்து 2024.05.21 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 4,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், வழங்கல்கள் முகாமையாளரின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கிலத்திலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் நிதிப் பிரிவின் காசாளரின் கருமபீடத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
6. பூர்த்திசெய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என தனித்தனியாக இரு தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு அதன் பின்னர் அவையிரண்டும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு மேலே குறிப்பிட்டுள்ளவாறான திகதியன்று அல்லது அதற்கு முன்னராக தலைவர்,திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட், 341/13, சரண மாவத்தை, இராஜகிரிய என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. விலைமனுக்கள் மேலே விபரிக்கப்பட்டவாறு விலைமனுதாரர் அல்லது சமுகமளித்திருக்கும் அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு உருவாக்கப்பட்டட விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 3 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - இலங்கை கனிப்பொருள் லிமிட்டட்டின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு.**

---

# தங்கப் பதக்கம் வென்ற ரொசானுக்கு கண்டியில் கௌரவிப்பு நிகழ்வு

**அக்குறணை குறூப் நிருபர்**

சிறுவர் குரல் (The Voice Kids Sri Lanka) என்ற நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்ற அஸ்லம் ரொசான் என்ற மாணவனை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று அண்மையில் கண்டியில் இடம் பெற்றது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் கண்டி சிட்டி சென்றர் மத்திய நிலையத்தில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

இம்மாணவன் கண்டி மஹாநாம கல்லூரியை சேர்ந்தவராவார்.

மத்திய மாகாண பாடசாலைகள் விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் அத்துல ஜயவர்தன, சிட்டி சென்றர் முகாமையாளர் மாதவ ஜயசிங்க உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## அறிவித்தல்

**நெல் சந்தைப்படுத்தல் சபை**

**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

### 2023/24 பெரும் போகத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் தொகையை வெளியேற்றுவதற்காக விலைமனுக்கள் கோரல்

**விலைக்கோரல் இல. PMB/OP/Paddy Is 2023/24 Maha**

நெல் சந்தைப்படுத்தல் சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2023/24 பெரும் போகத்தில் கொள்வனவு செய்யப்பட்டு அம்பாறை, இரத்தினபுரி, மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் உள்ள களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல் தொகையை விற்பனை செய்வதற்காக 2024ஆம் வருடத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையில் பதிவு செய்து கொண்டுள்ள நெல் ஆலை உரிமையாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதன் பொருட்டு மீளளிக்கப்படாத 2500.00 ரூபாவை நெல் சந்தைப்படுத்தல் சபையின் வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்து இயைபுடைய பற்றுச்சீட்டை நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிரதான அலுவலகம் / பிராந்திய அலுவலகங்களுக்குச் சமர்ப்பித்து 2024-05-03ஆம் திகதி மு.ப. 09.00 மணி முதல் 2024-05-13ஆம் திகதி பி.ப. 12.30 மணி வரையான கடமை நேரங்களில் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-05-13ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன், கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 6ஆம் மாடியில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிரதான அலுவலகத்தின் தலைவர் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நெல் சந்தைப்படுத்தல் சபை,**
**6ஆம் மாடி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கட்டிடம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு - 02.**

விலைக்கோரல்கள் 2024-05-13ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். 2024-05-13ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2023/24 பெரும் போகத்தின் நெல் தொகைகளை விற்பனை செய்தல் PMB/OP/Paddy Is 2023/24 Maha" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

| இல | களஞ்சியசாலை | மாவட்டம் | சிவப்பு நாடு அளவு Kg | இல | களஞ்சியசாலை | மாவட்டம் | சிவப்பு நாடு அளவு Kg |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பானம | அம்பாறை | 98,660 | 7 | கச்சிகல்ஆர | ஹம்பாந்தோட்டை | 295,172 |
| 2 | பொல்வத்த | அம்பாறை | 5,780 | 8 | சூரியவெவ | ஹம்பாந்தோட்டை | 111,793 |
| 3 | அம்பாறை 02 | அம்பாறை | 445,153 | 9 | யோதகண்டிய | ஹம்பாந்தோட்டை | 273,500 |
| 4 | சம்மாந்துறை 01 | அம்பாறை | 352,362 | 10 | வீரவில 1 | ஹம்பாந்தோட்டை | 116,774 |
| 5 | வீரகொட 02 | அம்பாறை | 374,789 | 11 | தெஹிகஹலந்த 03 | ஹம்பாந்தோட்டை | 206,985 |
| 6 | அலுத்வெவ | மொனராகலை | 159,475 | 12 | மொரகெட்டிய | இரத்தினபுரி | 181,536 |

நெல் தொகையை வழங்குவதற்கு இயைபான நிபந்தனைகள் விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும்.

நெல் தொகை வழங்குவது தொடர்பான இறுதித் தீர்மானத்தை நெல் சந்தைப்படுத்தல் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விபரங்களை கடமை நேரங்களில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் கணக்காளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. 011 232 6148)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நெல் சந்தைப்படுத்தல் சபை,**
**6ஆம் மாடி,**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கட்டிடம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு - 02.**

---

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக பொருட்களை வழங்கல்

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா மாவட்டத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா மாவட்டத்தில் பிரிவிற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

   I. **RDA/SP/1500km/WP/138 -** நீர்க்கொழும்பு நிறைவேற்று பொறியியல் பிரிவில் நீர்க்கொழும்பு வேளைத்தளத்திற்கு Asphalt Wearing Course வழங்கல்

   II. **RDA/SP/1500km/WP/139 -** நீர்க்கொழும்பு நிறைவேற்று பொறியியல் பிரிவில் ஜா-எல வேளைத்தளத்திற்கு Asphalt Wearing Course வழங்கல்

   III. **RDA/SP/1500km/WP/140 -** நீர்க்கொழும்பு நிறைவேற்று பொறியியல் பிரிவில் வத்தளை வேளைத்தளத்திற்கு Asphalt Wearing Course வழங்கல்

   IV. **RDA/SP/1500km/WP/141 -** நீர்க்கொழும்பு நிறைவேற்று பொறியியல் பிரிவில் மடம்பெல்ல வேளைத்தளத்திற்கு Asphalt Wearing Course வழங்கல்

   V. **RDA/SP/1500km/WP/157 -** கம்பஹா நிறைவேற்று பொறியியல் பிரிவில் கம்பஹா வேளைத்தளத்திற்கு Asphalt Wearing Course வழங்கல்

   VI. **RDA/SP/1500km/WP/158 -** கம்பஹா நிறைவேற்று பொறியியல் பிரிவில் கடவத்தை வேளைத்தளத்திற்கு Asphalt Wearing Course வழங்கல்

   VII. **RDA/SP/1500km/WP/159 -** கம்பஹா நிறைவேற்று பொறியியல் பிரிவில் பட்டிவில வேளைத்தளத்திற்கு Asphalt Wearing Course வழங்கல்

   VIII. **RDA/SP/1500km/WP/160 -** கம்பஹா நிறைவேற்று பொறியியல் பிரிவில் மினுவாங்கொடை வேளைத்தளத்திற்கு Asphalt Wearing Course வழங்கல்

   IX. **RDA/SP/1500km/WP/161 -** நிட்டம்புவ நிறைவேற்று பொறியியல் பிரிவில் நிட்டம்புவ வேளைத்தளத்திற்கு Asphalt Wearing Course வழங்கல்

   X. **RDA/SP/1500km/WP/162 -** நிட்டம்புவ நிறைவேற்று பொறியியல் பிரிவில் மீரிகம வேளைத்தளத்திற்கு Asphalt Wearing Course வழங்கல்

   XI. **RDA/SP/1500km/WP/163 -** நிட்டம்புவ நிறைவேற்று பொறியியல் பிரிவில் பூகொட வேளைத்தளத்திற்கு Asphalt Wearing Course வழங்கல்

2. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**

   வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.**
**தொ.பே 033-2221020 / 033-2226752**

SELACINE

---

## விலைமனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனுக்கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| சேவைகள் | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/089<br>வாடகைக்கு வான் - மின் அத்தியட்சகர் - I(திட்டமிடல்)- பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 15-05-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/090<br>வாடகைக்கு கட்டிடம் - நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையம் - கல்முனை (இரண்டு வருட காலம்) | 15-05-2024 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,கல்முனை 067-2229276 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 / 026-2221030 | 500.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சாரசபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை. பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

## தொழில்நுட்பவியல் அமைச்சு

### இலங்கை தரநிருணயங்கள் கட்டளை நிறுவனம்

# தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்

2024.05.30 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் கீழே விபரிக்கப்பட்டுள்ள அம்சத்தை கொள்வனவு செய்வதற்காக எதிர்பார்த்திருக்கும் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை தரநிருணயங்கள் கட்டளை நிறுவன திணைக்கள பெறுகைக் குழுத் (சிறிய ஒப்பந்தங்கள்) தலைவர் பெற்றுக் கொள்வார்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறு அல்லது இதநிகநி நிர்வாக பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

2024.05.02 ஆம் திகதியிலிருந்து 2024.05.29 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமான 7,000 இ.ரூபா + SSCL + பெசேவ ஆகியவற்றை செலுத்திய பின்னர் நிருவாகப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

1. சாதாரண அலுவலக நேரங்களில் இதநிகநி நிர்வாக பிரிவில் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
2. விதித்துரைக்கப்பட்ட நேரம் மற்றும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
3. அதே நாளில் விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே அவைகள் திறக்கப்படும்.
4. 2024.05.14 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
5. விலைமனுக்கள் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது சட்டபூர்வமான அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொடர்பு இலக்கம் | உபகரணம் | விலைமனுப் பிணை |
|---|---|---|
| SLSI/PRO/NCB/2024-1 | ஆய்வுகூட தளபாடம் மற்றும் இணைப்புக்களை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல். | 130,000 இ.ரூபா |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (சிறிய ஒப்பந்தங்கள்),**
**இலங்கை தரநிர்ணயங்கள் கட்டளைகள் நிறுவனம்,**
**இல.: 17, விக்டோரியா பிளேஸ்,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-08.**

---

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

### வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு

### வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# கேள்வி அழைப்பு

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் வேலைகளுக்காக முன் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| விலைமனு இல. | பெறுகை இலக்கம் | வேலையின் பெயர் | பொறியியல் மதிப்பீட்டுப் பெறுமதி (வெட் இன்றி) (ரூ. மில்லியன்) | ICTAD நிறுவனப் பதிவு | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூ) | கேள்விப் பிணை முறியின் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20/BR/01/2024 | யால தேசிய பூங்கா சப்பாத்து பாலத்தைப் புதுப்பித்தல் - கட்டம் 02 | 7.9 | C6/C7/C8 (பாலம் மற்றும் வீதி) | 3,000.00 | 120,000.00 /- 2024.09.22 வரை செல்லுபடியாதல் வேண்டும். |
| 02 | WL/02/20/BR/02/2024 | யால தேசிய பூங்கா சப்பாத்து பாலத்தைப் புதுப்பித்தல் - கட்டம் 03 | 7.7 | C6/C7/C8 (பாலம் மற்றும் வீதி) | 3,000.00 | 117,000.00 /- 2024.09.22 வரை செல்லுபடியாதல் வேண்டும். |

02. கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

03. இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களை 2024-06-03ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பத்தரமுல்லை, வனசீவராசிகள் திணைக்களத்தின் கணக்கிடல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் சகல கேள்விதாரர்களும் கடந்த ஆறு மாதங்களுக்கான வங்கி அறிக்கைகள் மற்றும் கடந்த 05 வருடங்களினுள் நிறைவு செய்யப்பட்ட இதற்குச் சமமான 02 வேலைகளை முற்படுத்துதல் வேண்டும் என்பதுடன் 10 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விகளுக்கு கேள்வி ஆவணங்களில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளை உறுதி செய்வதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய அறிக்கைகளை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை 2024-06-03ஆம் திகதி வரையில் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் எனும் பெயருக்கு எழுத்து மூலமான கோரிக்கை மற்றும் ICTAD பதிவுப் புத்தகம் மற்றும் மீளளிக்கப்படாத வைப்பை திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம்.

06. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் குறித்த செயற்றிட்ட வளாகத்தை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

07. மேற்கூறிய கேள்விப் பிணை முறியை வங்கியின் மூலம் செலுத்துவதானால் தரப்பட்டுள்ள பெறுமதி மற்றும் தரப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் வகையில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதை ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியை இணைத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணை முறியைச் சமர்ப்பிக்காத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும். 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் கம்பனி பதிவாளர் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட PCA 03 சான்றிதழ் கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறல்லாத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

08. கேள்விதாரர்களுக்கு மேற்படி இரு கேள்விகளுக்கும் அல்லது ஒன்றிற்காக கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம்.

09. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2024- 04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அன்றைய தினமே (2024-04-25) பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

10. கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை 0112-871537 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு கொண்டுள்ளது என்பதுடன் இவ் அறிவித்தலில் அல்லது மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்படாத இந்தப் பெறுகைச் செயற்பாட்டிற்குரித்தான ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்வொன்றை வழங்கும் அதிகாரத்தை வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கொண்டுள்ளார்.

11. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்லை.**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Lake House Branch Acc. No. 000000377

---

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்

### நீர்ப்பாசன அமைச்சு

### நீர்ப்பாசன திணைக்களம்

# தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்

**IFB No.: IFB/DI/GAL/W/15/ERMMIS/2024-01**

**IFB No.: IFB/DI/GAL/W/15/ERMMIS/2024-02**

**IFB No.: IFB/DI/GAL/W/15/ERMMIS/2024-33**

**IFB No.: IFB/DI/GAL/W/15/ERMMIS/2024-37**

**IFB No.: IFB/DI/GAL/W/15/ERMMIS/2024-38**

1. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் காலி,நீர்ப்பாசன பணிப்பாளர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த பொதி இல. | வேலையின் பெயர் | மாவட்டம் | பூர்த்தியாக்கும் கால எல்லை (நாட்களில்) | ICTAD (ஆகக் குறைந்த தரம்) | விலைமனுப்பிணை | | விலைமனு செல்லுபடியாகும் காலம் (நாட்களில்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை - இ.ரூபா. | காலம் (நாட்களில்) | |
| DI/GAL/W/15/ERMMIS/2024-01 | Improvements to Ellakanda main canal construction of canal lining 2+880 to 3+030 in Kekanadura scheme | மாத்தறை | 365 | சீ-6 நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகாலமைப்பு | 160,000.00 | 2024.08.08 வரையும் (105 நாட்கள்) | 77 |
| DI/GAL/W/15/ERMMIS/2024-02 | Improvements to Ellakanda main canal construction of canal lining 4+6080 to 4+708 in Kekanadura scheme | மாத்தறை | 365 | சீ-7 நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகாலமைப்பு | 100,000.00 | 2024.08.08 வரையும் (105 நாட்கள்) | 77 |
| DI/GAL/W/15/ERMMIS/2024-33 | Improvements to D/S of sapugoda anicut L/B& R/B banks in Kirama in Sapugoda Scheme | மாத்தறை | 365 | சி-7 நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகாலமைப்பு | 100,000.00 | 2024.08.08 வரையும் (105 நாட்கள்) | 77 |
| DI/GAL/W/15/ERMMIS/2024-37 | Construction of 40m and 16m long gabian wall at maranduara main canal at Wedagedara road in Ellwela scheme | மாத்தறை | 365 | சி-7 நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகாலமைப்பு | 100,000.00 | 2024.08.08 வரையும் (105 நாட்கள்) | 77 |
| DI/GAL/W/15/ERMMIS/2024-38 | Improvements of Batuwita branch canal of Urapola scheme | மாத்தறை | 365 | சி-7 நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகாலமைப்பு | 100,000.00 | 2024.08.08 வரையும் (105 நாட்கள்) | 77 |

- கடந்த ஐந்து (5) வருடங்களில் வருடாந்த நிர்மாண சராசரி நிதிப்புரள்வு 25 மில்லியன் இ.ரூபாவாகவிருத்தல்.
- விலைமனுதாரர் 4 மில்லியன் ரூபா நிதிசார் வளங்களுக்கான அணுகுவழி அல்லது இருப்பு நிலையை காட்சிப்படுத்தல் வேண்டும்.

3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் மேலேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டுமென்பதுடன் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவுமிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் காலி, பெலிகஹா சந்தி, 481 ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். தொலைபேசி: 091-2234301. விரும்பின், மேலதிக தகவலை கீழே அவரின் தொடர்பு விபரங்களுடன் வழங்கப்பட்டுள்ளதிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| மாவட்டம் | வரம்பெல்லை / மாவட்ட நீர்ப்பாசன அலுவலகம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| காலி | நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகம், காலி | இ. 481, பெலிகஹா சந்தி, காலி | 091-2234301 |

5. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்கு மேலதிகமாக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள தொழில்நுட்ப, நிதிசார், சட்டரீதியான மற்றும் ஏனைய தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. 2024.05.02 ஆம் திகதியிலிருந்து 2024.05.21 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் ஒவ்வொரு தொகுதிக்கும் 3,500 இ.ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், காலி, பெலிகஹா சந்தி, 481 ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

7. 2024.05.24 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் இரு பிரதிகளில் நீர்ப்பாசன பணிப்பாளர், நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகம், இல. 481, பெலிகஹா சந்தி, காலி' அல்லது காலி, பெலிகஹா சந்தி, 481 ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே காலி, நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்ட அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

8. விலைமனுக்கள் (மேலேயுள்ள அட்டவணையில் விலைமனுக்களின் செல்லுபடியாகும் காலம் வழங்கப்பட்டுள்ளன) அவைகளை திறந்த பின்னர் செல்லுபடியாதல் வேண்டுமென்பதுடன் காலி நீர்ப்பாசன பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுடனில்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

| மாவட்டம் | வேலையின் பெயர் | தளவிஜயத்தில் உதவி வழங்கும் பிரதேச பொறியியலாளர் | தள விஜயம் (திகதி மற்றும் நேரம்) | விலைமனு முன்னோடிக் கூட்டம் (திகதி மற்றும் நேரம்) | விலைமனு முன்னோடிக் கூட்ட அமைவிடம் |
|---|---|---|---|---|---|
| மாத்தறை | Improvements to Ellakanda main canal construction of canal lining 2+880 to 3+030 in Kekanadura scheme | மாத்தறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் | 2024.05.14 அன்று மு.ப. 9 மணிக்கு | 2024.05.14 அன்று பி.ப. 1 மணிக்கு | மாத்தறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகம், மாத்தறை |
| மாத்தறை | Improvements to Ellakanda main canal construction of canal lining 4+6080 to 4+708 in Kekanadura scheme | மாத்தறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் | 2024.05.14 அன்று மு.ப. 9 மணிக்கு | 2024.05.14 அன்று பி.ப. 1 மணிக்கு | மாத்தறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகம், மாத்தறை |
| மாத்தறை | Improvements to D/S of sapugoda anicut L/B& R/B banks in Kirama in Sapugoda Scheme | மாத்தறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் | 2024.05.14 அன்று மு.ப. 9 மணிக்கு | 2024.05.14 அன்று பி.ப. 1 மணிக்கு | மாத்தறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகம், மாத்தறை |
| மாத்தறை | Construction of 40m and 16m long gabian wall at maranduara main canal at Wedagedara road in Ellwela scheme | மாத்தறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் | 2024.05.14 அன்று மு.ப. 9 மணிக்கு | 2024.05.14 அன்று பி.ப. 1 மணிக்கு | மாத்தறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகம், மாத்தறை |
| மாத்தறை | Improvements of Batuwita branch canal of Urapola scheme | மாத்தறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் | 2024.05.14 அன்று மு.ப. 9 மணிக்கு | 2024.05.14 அன்று பி.ப. 1 மணிக்கு | மாத்தறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகம், மாத்தறை |

09. விலைமனு முன்னோடிக் கூட்டமானது மாத்தறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் நடைபெறும். (திகதி மற்றும் நேரம் ஆகியன மேலேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன) தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் மேலேயுள்ள அட்டவணையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளவாறு தளங்களை (திகதி மற்றும் நேரம் ஆகியன மேலேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன) பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் உதவியுடன் (மாத்தறை) மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டவாறு பரீட்சித்து விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் பங்குபெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

10. நீர்ப்பாசன திணைக்களத்தின் பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியும் முடிவானதாகும். நீர்ப்பாசன திணைக்கள பெறுகைக் குழுவானது தனியொரு, எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான அதிகாரத்தை அதனது சுயவிருப்பத்தின் அடிப்படையில் கொண்டுள்ளது.

**நீர்ப்பாசன பணிப்பாளர்,**
**நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகம்,**
**இல.: 481, பெலிகஹா சந்தி,**
**காலி.**

**திகதி: 02.05.2024**

# கண்டி மாநகர சபை

## 2024ஆம் அரை வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் அரை வருடத்தின் பொருட்டு பின்வரும் வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்வதற்காக உற்பத்தியாளர்கள், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. வழங்கல்கள்**

1. ஆயுர்வேத மருந்து வகைகள்
2. மேல்நாட்டு மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள்
3. தீயணைப்புக் கருவிகள் (பொருத்துதல் உட்பட)
4. பொதுவான களஞ்சியப் பொருட்கள் (இரும்பு, ஜீஐ குழாய்கள், கம்பிகள், குளியலறை மற்றும் மலசலகூட உதிரிப்பாகங்கள், பிளாஸ்டிக் நீர்த்தாங்கி, கொம்போஸ்ட் பீப்பாய்கள், கூரைத் தகடுகள் மற்றும் முட்டுகள், பலஞ்சி போன்றன)
5. நிறப்பூச்சு வகைகள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள்
6. சுகாதாரம் சார்ந்த உபகரணங்கள் (ஈர்க்கிள், தும்புத்தடி, பிரம்புக் கூடைகள், பிளாஸ்டிக் குப்பைக் கூடைகள், விம், ஹார்பிக், சவர்க்கார வகைகள், பைனோல், கையுறைகள் போன்றன)
7. காலணிகள், சப்பாத்து, காலுறைகள் போன்றன
8. சீருடைக்குத் தேவையான துணி வகைகள் மற்றும் டீ சேர்ட்
9. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள்
10. டயர், டயர் டியூப் மற்றும் பெட்டறி (வாகனங்களுக்கானவை)
11. வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் (வேன், மோட்டார் சைக்கிள், டிராக்டர், கல் உருளை, டிப்பர், முச்சக்கர வண்டி, பகோ உட்பட சகல வாகனங்களுக்குமான பாவித்த மற்றும் புதிய உதிரிப்பாகங்கள்)
12. அலுவலக மின் உபகரணங்கள் (கூட்டல் இயந்திரம், கேத்தல், மின் விசிறிகள்)
13. CCTV கமரா, விரல் ரேகை பதிவு இயந்திரம் மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்கள்
14. அலுவலக உபகரணங்கள் மரம் மற்றும் உருக்குத் தளபாடங்கள் (ராக்கைகள் / அலுமாரிகள் / மேசை / பைல் கெபினெட்டுகள், பிளாஸ்டிக் கதிரைகள் போன்றன)
15. கணனி இயந்திரங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், நகல் பிரதி இயந்திரங்கள்
16. மின்சார சேவைகளை வழங்குவதற்குத் தேவையான துணைப்பாகங்கள் (வயர் / சுவிட்ச் / பல்ப் / பிளக் போன்றன)
17. அலுவலக காகிதாதிகள், கணனி ரிபன் கார்ட்ரிச், டோனர் போன்றன
18. அச்சு வேலைகள் (அச்சடிக்கப்பட்ட படிவங்கள் மற்றும் புத்தகங்கள், திகதி முத்திரைகள் மற்றும் இறப்பர் முத்திரைகள்)
19. கட்டிடப் பொருட்கள் (மணல் / கல் / மெட்டல் போன்றன)
20. ஹியூம் குழாய்கள், கொங்கிறீட் தூண்கள், எல்லைக் கற்கள், சீமெந்து புளொக் கற்கள், கொங்கிறீட் சார்ந்த உற்பத்திகள்
21. சீமெந்து, கொங்கிறீட் முன் கலவை (Ready mix), பிரீமிக்ஸ் போன்றன.
22. அரியப்பட்ட மரம் (பலகை, தீராந்தி போன்றன)
23. உராய்வுநீக்கி எண்ணெய் வகைகள்
24. இமல்ஷன் தார்
25. உரங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் (இரசாயன உரங்கள் மற்றும் மிருக உரங்கள்)
26. நீரை சுத்திகரிக்கும் இரசாயனப் பொருட்கள் (ஹைட்ரேட் லைம், அலுமினியம் சல்பேற், குளோரின், டீ.சீ.எல் தூள்கள் போன்றன)
27. நீரிறைக்கும் இயந்திரத்திற்கான பெயாரிங்
28. பீவீசீ உபகரணங்கள் (சீ.ஐ.ஜீ.ஐ. நீர்க்குழாய் துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்)
29. நீர் மானிகள், நீரிறைக்கும் இயந்திரங்கள் / நீர் மோட்டர்கள், நீரைச் சுத்திகரிக்கும் மின் உபகரணங்கள் / நீர் சுத்திகரிப்பு முறைமைக்குத் தேவையான உபகரணங்கள் போன்ற பொருட்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள்
30. புத்தகங்கள் / புதினப் பத்திரிகைகள் / சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்தல்
31. பாதுகாப்பு உபகரணங்கள் (அங்கிகள், ஹெல்மெட் போன்றன)
32. தோட்டத்திற்குத் தேவையான மர வகைகள், மலர்க் கன்றுகள் மற்றும் புல் பற்றைகள்
33. மேற்கவிகைகள், கூடாரத் துணிகள் மற்றும் திரைச்சீலைகள் போன்றன.
34. பதக்கங்கள், கவசங்கள், பித்தளை பெயர்ப் பலகைகள், விருதுகள்
35. மின்சார வலுசக்தி தொகுதிகள் (மின்சார வாள், டிரில் போன்றன)

**02. சேவைகள்**

36. நீர்ப் பம்பிகள், நீர் மோட்டர்கள், நீரைச் சுத்திகரிக்கும் முறைமைகளின் திருத்தவேலைகள்
37. ரோணியோ இயந்திரங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்களின் திருத்தவேலைகள்
38. கணனி இயந்திரங்கள் மற்றும் அச்சுப்பொறிகளின் திருத்தவேலைகள்
39. கதிரை பின்னுதல் மற்றும் குஷன் செய்தல் மற்றும் திருத்தவேலைகள்
40. விரல் ரேகை பதிவு இயந்திரம், CCTV கமரா திருத்தவேலைகள்
41. வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் (டிராக்டர் / பயணிகள் வாகனங்கள் / டிப்பர் / கம்பெக்டர் வாகனம் / மரம் வெட்டும் இயந்திரம் போன்றன)
42. டயர்களை மீள நிரப்புதல் மற்றும் பழைய டயர்களைக் கொள்வனவு செய்தல்
43. இயந்திரங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை வாடகைக்கு வழங்குதல்
44. சம்பத் பியஸ பொருட்களை விற்பனை செய்தல் (காட்போர்ட், இரும்பு, பித்தளை, பிளாஸ்டிக் மற்றும் துண்டாக்கப்பட்ட பிளாஸ்டிக் போன்றன)
45. மேற்கவிகைகள், கதிரைகள், பீங்கான்கள் போன்ற உற்சவப் பொருட்களை வாடகைக்கு வழங்குதல்
46. வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள்
47. ஏனையவை.

மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவையின் பொருட்டும் வெவ்வேறாக பதிவு செய்து கொள்வதற்காக ஒரு உருப்படியின் பொருட்டு 1180.00 ரூபா வெட் வரி உள்ளடங்களான கட்டணம் அறவிடப்படும். இதற்கு பணம் செலுத்துவதற்குத் தேவையான விபரங்கள் பின்வருமாறாகும். 2024-05-02ஆம் திகதி முதல் 2024-05-27ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.45 மணி வரை மாநகர சபையின் வழங்கல் பிரிவில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லாவிடில் எமது http//kandy.mc.gov.lk எனும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2024-05-22ஆம் திகதியாகும். விண்ணப்பப்படிவத்துடன் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் வேண்டுகோள் கடிதம் மற்றும் வெட் வரி செலுத்துபவரானால் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியையும் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பணம் செலுத்தக்கூடிய வங்கி | - | இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் |
| கணக்கின் பெயர் | - | மாநகர ஆணையாளர், மாநகர சபை, கண்டி |
| கணக்கிலக்கம் | - | 0000032764 |

வங்கி பற்றுச்சீட்டில் உள்ள ''வைப்புத் தேவைப்பாடு'' எனும் பகுதியில் Supp Reg 2024 எனக் குறிப்பிடவும்.

மேற்கூறிய விபரங்களைக் குறிப்பிட்டு ரொக்கப் பணமாக மட்டும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கணக்காளர் (வழங்கல்), மாநகர சபை, கண்டி எனும் முகவரிக்கு 2024-05-27ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அரை வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024 எனக் குறிப்பிடுதல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்**

i. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களுக்கு புறம்பாக தேவையான வேளைகளில் ஏனைய பெறுகை முறைகளைக் கையாண்டு பொருட்களைக் கொள்வனவு செய்யும் அதிகாரம் இந்த சபைக்கு / மாநகர சபை ஆணையாளருக்கு உண்டு.

ii. தேவையான வேளைகளில் மாதிரிகளை சமர்ப்பிக்காத மற்றும் தருவித்தற் கட்டளையின் பிரகாரம் உரிய நேரத்திற்கு, தரம் மற்றும் உயர்ந்த குணவியல்புகளைக் கொண்ட பொருட்களை வழங்காத வழங்குநர்களின் பதிவு எவ்வித முன்னறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.

iii. பொருட்கள் வழங்கிய நாள் முதல் குறைந்தபட்சம் 45 நாட்களுக்கான கடன் வசதியை வழங்குநர்கள் வழங்குதல் வேண்டும்.

iv. உரிய வகையிலான தரம் மற்றும் குணவியல்புகளைக் கொண்ட இயைபுடைய விபரக்குறிப்புகளுக்கு அமைவாக பொருட்களை வழங்குதல் வேண்டும். எந்தவொரு வேளையிலும் வழங்குநர்களுக்கு முற்பணம் செலுத்தப்பட மாட்டாது.

மேலதிக விபரங்களை கணக்காளர் (வழங்கல்கள்) அவர்களிடமிருந்து 081-2232071 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம். வழங்குநர்களைப் பதிவு செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை மாநகர ஆணையாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**கே.கே.பீ.ஐ.டி.பீ. விஜேதிலக,**
**மாநகர ஆணையாளர்.**

**2024-04-25ஆம் திகதி**
**மாநகர சபை, கண்டி**

# மக்கள் வங்கி

## கொழும்பு மேற்கு பிராந்தியம்

## மீட்கப்படாத அடகு நகைகளை ஏலத்தில் விற்றல்

மக்கள் வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் என்பவற்றில் 2023.02.28ஆம் திகதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு 2024.05.31ஆம் திகதி கொடுக்கல் வாங்கல் முடிவடையும் வரை மீட்கப்படாத, தங்க நகைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஏலவிற்பனை நடத்தப்படும் திகதி 2024.06.01 மற்றும் 2024.06.02**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஹோமாகம 049 | தெஹிவளை 019 | பிலியந்தல 103 |
|---|---|---|---|
| கிளை | ஹோமாகம, அவிசாவளை, ஹங்வெல்ல | தெஹிவளை, தெஹிவளை காலி வீதி, கல்கிசை, இரத்மலான | மொறட்டுவ, மொறட்டுமுல்ல, கட்டுபெத்த, கெஸ்பேவ, பொரலஸ்கமுவ பிலியந்தல, பிலியந்தல நகரம் |
| சேவை நிலையம் | ஹோமாகம நகரம், பாதுக்க, மீகொட, கொடகம, இராணுவ ரெ.த. பனாகொட, கொஸ்கம, தல்துவ, ஹங்வெல்ல நகரம், கஹஹேன. | அத்திடிய, நெதிமால, களுபோவில, இரத்மலான பொருளாதார மையம். | இராவதாவத்த, கட்டுகுறுந்த, புவக் அரம்ப, சொய்சாபுர, கஹதுடுவ, பிலியந்தல நகரம். |

மேற்குறிப்பிடப்பட்டுள்ளபடி நடத்தப்படவிருக்கும் இந்த ஏலவிற்பனையை மீண்டும் அறிவித்தல் வழங்காமல் வங்கியின் தற்றுணிபின் படி இரத்துச் செய்வதற்கு, ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இலக்கம் 71, மொறட்டுவ வீதி, பிலியந்தல.

தொலைபேசி இலக்கம் : 0112180408, 0112180432, 0112180478

PEOPLE'S BANK
Pride of the Nation

## களனி பல்கலைக்கழகம் - இலங்கை

# பதவி வெற்றிடங்கள்

களனி பல்கலைக்கழகத்தின் கணனி செயற்பாடு மற்றும் தொழில்நுட்பவியல் கற்கைநெறிப் பீடத்திலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**01. தொழில்நுட்ப அலுவலர் (ICT) தரம் III**

சம்பள முறை: U-MT I(III A) 31,625-7x300; 10x355-37,275 ரூபா

(ஏனைய படிகள் அடங்கலாக மாதாந்த முழுமையான ஆரம்ப அண்ணளவான சம்பளம் 74,000 ரூபா.)

வயதெல்லை: வயதானது 18 இற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

**02. தொழில்நுட்ப அலுவலர் தரம் II பிரிவு "B"**

சம்பள முறை: U-MT I(III A) 31,625-7x300; 10x355-37,275 ரூபா (மாதாந்தம்)

வயதெல்லை: வயதானது 18 இற்கு குறையாமலும் 35 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

**03. பதவி: முகாமைத்துவ உதவியாளர் (தரம் III)**

சம்பள முறை: U-MN I(III A) 30,725-17x300 -35,825 ரூபா (மாதாந்தம்)

(ஏனைய படிகள் அடங்கலாக மாதாந்த முழுமையான ஆரம்ப அண்ணளவான சம்பளம் 73,000 ரூபா.)

வயதெல்லை: வயதானது 18 இற்கு குறையாமலும் 30 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

**04. பதவி: இயந்திர வல்லுனர் (தரம் II)**

சம்பள முறை: U-PL 3(III ) 29,915-16x270-34,235 ரூபா (மாதாந்தம்)

(ஏனைய படிகள் அடங்கலாக மாதாந்த முழுமையான ஆரம்ப அண்ணளவான சம்பளம் 71,000 ரூபா.)

வயதெல்லை: வயதானது 18 இற்கு குறையாமலும் 40 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்

**05. பதவி: இணைப்பாளர் (தரம் II)**

சம்பள முறை: U-PL 3(III ) 29,915-16x270-34,235 ரூபா (மாதாந்தம்)

(ஏனைய படிகள் அடங்கலாக மாதாந்த முழுமையான ஆரம்ப அண்ணளவான சம்பளம் 71,000 ரூபா.)

வயதெல்லை: வயதானது 18 இற்கு குறையாமலும் 40 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்

**06. பதவி: காய்ச்சி ஒட்டுபவர் (தரம் II)**

சம்பள முறை: U-PL 3(III ) 29,915-16x270-34,235 ரூபா (மாதாந்தம்)

(ஏனைய படிகள் அடங்கலாக மாதாந்த முழுமையான ஆரம்ப அண்ணளவான சம்பளம் 71,000 ரூபா.)

வயதெல்லை: வயதானது 18 இற்கு குறையாமலும் 40 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்

**07. பதவி: ஆய்வுகூட உதவியாளர் (தரம் III)**

சம்பள முறை: U-PL 2(III ) 28,025-16x270-32,345 ரூபா (மாதாந்தம்)

(ஏனைய படிகள் அடங்கலாக மாதாந்த முழுமையான ஆரம்ப அண்ணளவான சம்பளம் 68,000 ரூபா.)

வயதெல்லை: வயதானது 18 இற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்

**08. வேலை உதவியாளர் (தரம் III)**

சம்பள முறை: U-PL 1(III ) 27,025 – 16 x 250 – 30,775 ரூபா (மாதாந்தம்)

(ஏனைய படிகள் அடங்கலாக மாதாந்த முழுமையான ஆரம்ப அண்ணளவான சம்பளம் 67,000 ரூபா.)

வயதெல்லை: வயதானது 18 இற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்

**விண்ணப்பிப்பதற்கான முறை :**


மேலதிகமான விபரங்களுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ள www.kln.ac.lk/vacancies என்ற பல்கலைக்கழக இணையதளத்தை தயவு செய்து பார்வையிட்டு விண்ணப்ப படிவங்கள் பதிவிறக்கம் செய்யலாம். விதித்துரைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரித்தான சான்றிதழ்களின் பிரதிகளுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயர் குறித்துரைக்கப்பட்டு 2024 மே 17 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக உதவி பதிவாளர்/ கல்விசாரற்ற தாபனப் பிரிவு, களனி பல்கலைக்கழகம், தலுகம, களனி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

உயர் கல்வி நிறுவகங்கள், அரசாங்க திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்பப்படல் வேண்டும்.

பல்கலைக்கழகமானது அபேட்சகர்களை தெரிவு செய்வதற்கும் மற்றும்/ அல்லது மேலேயுள்ள அனைத்து நிலைகளுக்கும் ஆட்சேர்க்காமல் அல்லது அவைகளின் ஏதாவதொரு நிலைக்கு பேரவையிற்கு திருப்திகரமான காரணத்தை முன்னிட்டு ஆட்சேர்க்காமல் இருப்பதற்கான உரிமையை பேரவை கொண்டுள்ளது. இது தொடர்பாக பேரவையின் தீர்மானமே இறுதியானதாகும்.

தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் அல்லது பூர்த்தி செய்யப்படாத, தெளிவற்ற, மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்.**
**29.04.2024.**



# பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2024/04/30 திகதிக்கு காலாவதியாகும் இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2024/05/16 மற்றும் 2024/05/17 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

Orient Finance
ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577

skills

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA)

## தொழிலாளர்களை வழங்கும் விலைமனுக்களுக்கான அழைத்தல்

**(IFB No.: RDA/EE/BW/2024/01)**

மேலேயுள்ள IFB இலக்கத்தின் கீழ் பண்டாரவளை பிரதேசத்தில் வீதி பராமரிப்பு வேலைக்காக (ஒன்பது நிர்மாணங்கள்) தொழிலாளர்களை வழங்குவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக பண்டாரவளை பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.05.02 ஆம் திகதியிலிருந்து 2024.05.22 ஆம் திகதியன்று வரையும் வீஅஅ இன் www.rda.gov.lk என்ற இணைய பக்கத்தை பார்வையிடும்படி அல்லது 0572231176 என்ற தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**நிறைவேற்று பொறியியலாளர் (பண்டாரவளை)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## சீத்தாவக்க பிரதேச சபை

### சீத்தாவக்க பிரதேச சபைக்கு உரிமையுள்ள சுதுவெல்ல மலர்ச்சாலைக்கான பூர்த்தி செய்யும் வேலைகள்

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் பெசேவ மற்றும் இடைநிகழ்வுகள் நீங்கலாக அண்ணளவாக 7,431,000 இ.ரூபா ஆகுசெலவில் மதிப்பிடப்பட்டதும் சீத்தாவக்க பிரதேச சபைக்கு உரித்தான சுதுவெல்ல மலர்ச்சாலைக்கான வேலைகளின் பூர்த்திக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சீத்தாவக்க பிரதேச சபை பெறுகைக் குழுவானது அழைக்கின்றது.
2. மேல் மாகாணத்தில் உள்ளூராட்சி அமைச்சினால் அமுல்நடத்தப்படும் மாகாண அபிவிருத்தி மானிய திட்டத்தின் கீழ் நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளது.
3. தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகல் வேண்டுமென்பதுடன் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவுமிருத்தல் வேண்டும். கட்டிட நிர்மாணத்தில் CIDA தரமானது சி6 மற்றும் சி7 ஆகவிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
5. விலைமனுதாரர் மேலதிக தகவலை 036-2255052 என்ற தொலைபேசியூடாக அல்லது seethawaka.pradeshiyasabawa@gmail.com என்ற மின்னஞ்சலூடாக ஹன்வெல்ல, சீத்தாவக்க பிரதேச சபை, வேலைகளுக்கான அத்தியட்சகரிடமிருந்து பெற்று பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் சாதாரண வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்) விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
6. 2024.05.29 ஆம் திகதியன்று வரையும் ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவை செலுத்திய பின்னர், ஹன்வெல்ல, சீத்தாவக்க பிரதேச சபை செயலாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
7. அனைத்து விலைமனுக்களும் 75,000 இ.ரூபாவிலுள்ளதும் "சீத்தாவக்க பிரதேச சபை செயலாளரின் பெயரில்" வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்றுடனும் விலைமனுப் பிணையானது நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதமாகவும் இலங்கையிலுள்ள புகழ்வாய்ந்த வங்கியொன்றிலிருந்து மாத்திரம் பெற்றுக் கொண்டதுமாகவிருத்தல் வேண்டும் அல்லது ரொக்கப் பணத்தில் அமைந்திருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது 2024.07.31 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியிலும் ஹன்வெல்ல, சீத்தாவக்க பிரதேச சபையின் செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024.05.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். மூடும் நேரத்திற்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
9. 2024.05.21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணியிலிருந்து சீத்தாவக்க பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெறும்.

**செயலாளர்,**
**சீத்தாவக்க பிரதேச சபை,**
**ஹன்வெல்ல.**
**2024.04.30.**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## ஏல விற்பனை

### இலகுவில் அழிந்துபோகக்கூடிய கப்பற் சரக்கு விற்பனை
### ஏல விற்பனைத் திகதி : 2024.05.07 ஆம் திகதியன்று

**எனது இல.: LD/S/A/SLPA&SAGT/2024/04/PC-08**

கொழும்புத் துறைமுக பண்டாரநாயக்க வாசல் (BQ) நலன்புரி கட்டிடத்தில் 2024.05.07 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்வதற்காக SAGT & JCT திறந்த வெளிகளில் வைக்கப்பட்டுள்ள **Red Split Lentils, Basmati Rice, Kabuli Chickpeas, Arecanuts** (தொழில்துறை நோக்கத்திற்கானவை) **Frozen Sail Fish and RBD Palm Kernel Stearin** ஆகியவற்றை அடக்கியுள்ள தடையகற்றப்படாத இலகுவில் அழிந்துபோகக்கூடிய கப்பற் சரக்கு அடைக்கப்பட்ட கொள்கலன்கள் மேற்குறிப்பிட்டவாறு விற்பனை செய்யப்படும்.

2024.05.02 ஆம் திகதியன்று மு.ப. 8.30 மணியிலிருந்து 2024.05.03 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக பெசேவ உடனான 1,000 ரூபாவையும் மீளளிக்கப்படும் கட்டணமான 200,000 ரூபாவையும் செலுத்திய பின்னர், கொழும்பு-01, லோட்டஸ் வீதி 15 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, லொஜிஸ்டிக்ஸ் பிரிவின் விற்பனை பிரிவு அலுவலகத்திலிருந்து ஏல விற்பனை ஆவணங்கள் மற்றும் உட்செல்லல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம். (விலைமனுதாரர் அனைத்து ஆறு (06) அம்சங்களுக்கும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு விரும்பினால், மீளளிக்கப்படும் மொத்த தொகையாகிய 1,200,000 ரூபாவை மேற்குறிப்பிட்டுள்ளவாறு செலுத்துதல் வேண்டும்.

2024.05.06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் உரித்தான திறந்த வெளிகளில் விற்பனைக்கு பட்டியலிடப்பட்டுள்ள உருப்படிகளை பரீட்சிக்கலாம்.

**www.slpa.lk** என்ற இணையத்தை மேலதிக விபரங்களுக்காக பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்)**
**02.05.2024**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல.: 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**

# ஓய்வுபெற்ற தர்ஜினிக்கு அழைப்பு

ஓய்வுபெற்ற இலங்கை வலைப்பந்து வீராங்கனையான 46 வயது தர்ஜினி சிவலிங்கத்தை மீண்டும் தேசிய அணியில் இணையும்படி இலங்கை வலைப்பந்து சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

சவூதி அரேபியாவில் எதிர்வரும் செப்டெம்பர் 26 தொடக்கம் ஒக்டோபர் 6ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 13 ஆவது ஆசிய வலைப்பந்து போட்டியில் அவரை பங்கேற்கச் செய்யவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்து வரும் முன்னாள் அணித் தலைவியான தர்ஜினி இந்த அழைப்புக்கு இன்னும் பதிலளிக்கவில்லை. அவர் தென்னாபிரிக்காவில் கடந்த ஆண்டு நடைபெற்ற வலைப்பந்து உலகக் கிண்ண போட்டிக்குப் பின்னர் ஓய்வை அறிவித்திருந்தார்.

முன்னதாக அணிக்கு மீளத் திரும்புவது பற்றி வெளியான செய்தியை தர்ஜினி மறுத்திருந்தார்.

'தேசிய அணியில் இணையும் எண்ணம் எனக்கு இல்லை என்பதோடு 2023 இல் எடுத்த ஓய்வு முடிவில் நான் தொடர்ந்து இருக்கிறேன்' என்று அவர் ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை அணி 2018 மற்றும் 2022 ஆசிய சம்பியனாக தெரிவானதோடு தொடர்ந்து மூன்றாவது முறையாக அந்தப் பட்டத்தை தக்கவைக்க திட்டமிடும் நிலையிலேயே தர்ஜினிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தர்ஜினியுடன் உபாதைக்கு உள்ளாகி இருக்கும் திசலா அல்கம மற்றும் கயான்ஜலி அமரவன்ச ஆகியோர் பயிற்சிக் குழாத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாக இலங்கை வலைப்பந்து சம்மேளன தேர்வுக் குழு தெரிவித்துள்ளது.

தர்ஜினி தற்போது அவுஸ்திரேலியாவின் வலைப்பந்து லீக்கில் ஒரு தொழில்முறை வீராங்கனையாக ஆடி வருகிறார். அவர் இலங்கைக்காக நான்கு ஆசிய சம்பியன்சிப் மற்றும் மூன்று உலக சம்பியன்சிப் போட்டிகளில் பங்கேற்றுள்ளர். 6 அடி 9 அங்குலம் உயரம் கொண்ட அவர் உலகின் உயரமான கோல் சூட்டர் என்ற பெருமையையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆசிய ரக்பி சம்பியன்சிப்: இலங்கை இறுதிக்கு தகுதி



ஆசிய ரக்பி சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு, ரீட் அவன்யு விளையாட்டரங்கில் நடைபெறும் முதலாம் பிரிவு ஆசிய ரக்பி சம்பின்சிப் இறுதிப் போட்டிக்கு இலங்கை தகுதி பெற்றது. இந்தியாவுக்கு எதிராக நேற்று முன்தினம் (ஏப்ரல் 30) நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் 45–10 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலங்கை அணி வெற்றியீட்டியது.

போட்டியின் முதல் பாதியில் 21–03 என முன்னிலை பெற்ற இலங்கை இரண்டாவது பாதியில் இந்திய வீரர்கள் சவால் விடுத்தபோதும் மேலும் 24 புள்ளிகளை பெறுவதற்கு இலங்கையால் முடிந்தது.

இதன்போது இந்திய அணி முதல் 14 நிமிடங்களிலேயே 03 புள்ளிகளைப் பெற்று முன்னிலையில் இருந்தது. இதனைத் தொடர்ந்து இலங்கை வீரர்கள் அடுத்தடுத்து புள்ளிகளைப் பெற்று ஆதிக்கம் செலுத்தினர்.

இந்தத் தொடரின் முதல் அரையிறுதிப் போட்டியில் கடும் போராட்டத்தின் பின்னர் கட்டார் அணியை 33–31 என்ற புள்ளிகளால் கசகஸ்தான் அணி வீழ்த்தியது.

இதன்படி இலங்கை மற்றும் கசகஸ்தான் அணிகளுக்கு இடையிலான இறுதிப் போட்டி மற்றும் கட்டார் மற்றும் இந்தியாவுக்கு இடையிலான மூன்றாம் இடத்திற்கான போட்டி எதிர்வரும் மே 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

7 ஆண்டுகளின் பின்னர் இலங்கையில் நடைபெறும் முதலாவது சர்வதேச ரக்பி போட்டியான ஆசிய ரக்பி முதலாம் பிரிவு நொக் அவுட் போட்டியில் வெற்றி பெறும் அணி, அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய ரக்பி 15 பேர் கொண்ட பிரதான சம்பியன்ஷிப் போட்டிக்கு தகுதி பெறும்.



## சர்வதேச செய்திகள்

# 'ரபா படையெடுப்பு' எச்சரிக்கையை தொடர்ந்து வாழ்வா, சாவா நிலையில் போர் நிறுத்த பேச்சு

## ஹமாஸ் மீது அமெரிக்கா அழுத்தம்

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் நிரம்பி வழியும் ரபா மீது படை நடவடிக்கையை முன்னெடுப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதியாக குறிப்பிட்டிருக்கும் நிலையில், போர் நிறுத்தத்திற்கான முயற்சியை அமெரிக்கா தீவிரப்படுத்தியுள்ளது.

காசாவில் போர் வெடித்த பின் பிராந்தியத்திற்கு ஏழாவது தடவையாக விஜயம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன், சவூதி அரேபியாவில் இருந்து இஸ்ரேல் சென்றுள்ளார்.

டெல் அவிவில் இஸ்ரேல் ஜனாதிபதி இசாக் ஹெர்சொக்கை சந்தித்த அவர், 'இந்த கடினமான காலத்திலும் கூட, பணயக்கைதிகளை வீட்டுக்கு கொண்டு வரும் போர் நிறுத்தத்தை பெறவும், அதை இப்போதே பெறவும் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்' என்றார்.

'அதனை எட்ட முடியாததற்கு ஒரே காரணம் ஹமாஸ் தான்' என்றும் அவர் கூறியுள்ளார்.

டெல் அவிவில் செய்தியாளர்களிடம் பேசிய அன்டனி பிளிங்கன், 'போர் நிறுத்தத்திற்கான உடன்படிக்கையை எட்டுவது மற்றும் காசாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதில் எந்தத் தாமதம் அல்லது எந்த சாக்குப்போக்கும் இருக்கக் கூடாது' என்று வலியுறுத்தினார்.

இந்நிலையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் பிளிங்கனின் குற்றச்சாட்டை நிராகரித்த ஹமாஸ் மூத்த அதிகாரி சமி அபூ சுஹ்ரி, பழியை இஸ்ரேலிடம் இருந்து மாற்றி ஹமாஸ் மீது அழுத்தம் கொடுக்கும் தந்திரம் என்றார்.

'பிளிங்கனின் கருத்துகள் உண்மைக்கு முரணானது. அமெரிக்காவினது அன்று இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சராக அறியப்படும் பிளிங்கன் இவ்வாறு கருத்துத் தெரிவிப்பது அபூர்வமானதல்ல' என்றும் சுஹ்ரி கூறினார்.

காசாவில் 40 நாள் போர் நிறுத்தம் ஒன்றுக்கு இஸ்ரேல் முன்வைத்த முன்மொழிவு தொடர்பில் ஹமாஸ் அமைப்பு ஆராய்ந்து வருவதோடு, அது தொடர்பில் விரைவில் எழுத்து மூலம் பதில் அளிக்கப்போவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

போர் நிறுத்த முயற்சியாக பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் ஸ்டபனே செஜோர்ன் திடீர் விஜயமாக கெய்ரோ பயணித்துள்ளார். போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் இருப்பதாகவும் ஆனால் அது ஒரு நீண்ட கால போர் நிறுத்தத்தை நோக்கிய முதல் படியாக மட்டுமே இருப்பதாகவும் அவர் முன்னதாக குறிப்பிட்டிருந்தார்.

ரபா மீதான இஸ்ரேலின் படை நடவடிக்கை அதன் போருக்கு எந்த வகையிலும் உதவாது என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

என்றாலும் ஹமாஸுடனான பேச்சுவார்த்தை எவ்வாறு அமைந்தபோதும் தெற்கு நகரான ரபா மீது படையெடுப்பு ஒன்று முன்னெடுக்கப்படும் என்று நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார். பணயக் கைதிகளின் உறவினர்களை நேற்று முன்தினம் (30) சந்தித்த அவர் உடன்பாடு எட்டப்பட்டாலும் இல்லாவிட்டாலும் படையெடுப்பு முன்னெடுக்கப்படும் என்று குறிப்பிட்டார். 'உடன்படிக்கை இருந்தபோதும் இல்லாதபோதும் நாங்கள் ரபாவுக்கு நுழைவோம், அங்குள்ள ஹமாஸ் படைப் பிரிவுகளை ஒழிப்போம்' என்று நெதன்யாகு குறிப்பிட்டதாக அவரது அலுவலகம் தெரிவித்தது.

கெய்ரோவில் இடம்பெறும் புதிய சுற்று போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற ஹமாஸ் பிரதிநிதிகள் தற்போது கட்டார் திரும்பி இருப்பதோடு, புதிய போர் நிறுத்தம் பற்றி தமது எழுத்துமூலமான பதிலுடன் மீண்டும் கெய்ரோ திரும்பவிருப்பதாக எகிப்து உளவுச் சேவையுடன் தொடர்புபட்ட அல் கஹ்ரி செய்தித்தளம் குறிப்பிட்டிருந்தது.



இந்நிலையில் இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் கூறியதாவது, 'அரசு புதன்கிழமை (நேற்று) இரவு வரை பதிலுக்காக காத்திருக்கும். அதன் பின் கெய்ரோவுக்கு தூதுக் குழுவை அனுப்புவதா, இல்லையா என்று முடிவெடுக்கும்' என்றார்.

போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை வாழ்வா, சாவா என்ற கட்டத்தை எட்டி இருக்கும் நிலையில் ரபா மீதான தாக்குதல் அச்சம் அதிகரித்துள்ளது. 1.5 மில்லியனுக்கு அதிகமான மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் இந்தப் பகுதி மீது படையெடுப்பது பேரழிவை ஏற்படுத்தும் என்று அமெரிக்கா உட்பட உலகத் தலைவர்கள் எச்சரித்து வருகின்றனர்.

ரபா மீதான படையெடுப்பை தடுப்பதற்கு இஸ்ரேல் மீது செல்வாக்கு செலுத்தக் கூடிய நாடுகள் தமது அனைத்து அதிகாரத்தையும் பயன்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் வலியுறுத்தியுள்ளார். 'ரபாவை விட்டுவிடும்படி உலகம் பல வாரங்களாக இஸ்ரேல் நிர்வாகத்தை கேட்டுவருகின்றபோதும், அங்கு தரைவழி நடவடிக்கை ஒன்று உடன் நிகழ வாய்ப்பு உருவாகியுள்ளது' என்று ஐ.நா. மனிதாபிமான விவகாரங்களுக்கான தலைவர் மார்டின் கிரிபித்ஸ் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். 'ரபா மீதான தரைவழி நடவடிக்கை வார்த்தைகளால் கூற முடியாத பேரவலத்தை ஏற்படுத்தும் என்பது ஒரு சாதாரண உண்மையாகும்' என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

### ரபாவில் தயாராகும் இஸ்ரேல்

ஏழு மாதங்களாக நீடிக்கும் இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு மத்தியில் வெளியேற்றப்பட்டு தற்போது ரபாவில் அடைக்கலம் பெற்றிருக்கும் மக்கள் உணவு, நீர் மற்றும் மருந்துகளுக்கு இருக்கும் பெரும் பற்றாக்குறைக்கு மத்தியிலேயே வாழ்கின்றனர்.

எனினும் அந்த நகருக்கு அருகில் டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களை குவித்து வைத்திருக்கும் இஸ்ரேல் ரபா மீதான வான் மற்றும் பீரங்கி தாக்குதல்களை அண்மைய வாரங்களில் அதிகரித்துள்ளது.

ரபாவின் ஷபூரா அகதி முகாமில் உள்ள வீடு ஒன்றின் மீது கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் இரு சிறுவர்கள் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது. இதன்போது சிறுவர் ஒருவனும் அவனது தங்கையுமே கொல்லப்பட்டதாக அங்குள்ள வபா செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

ரபாவின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் இஸ்ரேல் போர் விமானங்கள் தீவிர வான் தாக்குதல்களை நடத்தியதாகவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மறுபுறம் மத்திய காசாவில் நுசைரத் அகதி முகாமில் உள்ள அடுக்கு மாடிக் குடியிருப்பு ஒன்றின் மீது இஸ்ரேல் வீசிய குண்டு மழையில் ஒரு குழந்தை உட்பட மூவர் கொல்லப்பட்டுள்ளனர். மத்திய காசாவில் டெயிர் அல் பலாஹ்வில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் குண்டு வீசியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மறுபுறம் தெற்கில் கான் யூனில் முகாமில் இடிபாடுகளில் இருந்து மீட்பாளர்கள் ஒன்பது சடலங்களை கண்டுபிடித்திருப்பதோடு அங்கு தேடுதல்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

காசாவில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் அங்கு 10 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் காணாமல் போயிருப்பதாக தரவுகள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு காணாமல்போனவர்களில் பெரும்பாலானவர்கள் தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலிய தாக்குதலில் 33 பேர் கொல்லப்பட்டு மேலும் 57 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 35,568 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 77,765 பேர் காயமடைந்துள்ளனர்.

# நீதிமன்றத்தை அவமதித்த டிரம்பிற்கு அபராதம் விதிப்பு



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்பிற்கு 9 ஆயிரம் டொலர் அபராதம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

டிரம்ப், தன்னுடனான பாலியல் உறவுகளை மூடி மறைக்க ஆபாச நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸுக்கு பணம் கொடுத்தது தொடர்பாக அவருக்கு எதிராக நீதிமன்றில் விசாரணை நடந்து வருகிறது.

இந்த சூழலில் இந்த வழக்கில் தொடர்புடையவர்கள் குறித்து பொது வெளியில் பேசக்கூடாது என டிரம்புக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

ஆனால் அவர் அதை மீறி வழக்கில் தொடர்புடையவர்களை பொதுவெளியில் தொடர்ந்து விமர்சித்து வந்தார்.

இதைத்தொடர்ந்து நீதிமன்றத்தை அவமதித்ததாக கூறி டிரம்ப் நேற்று முன்தினம் (ஏப்ரல் 30) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது நீதிபதி அவருக்கு 9 ஆயிரம் டொலர் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

மேலும் நீதிமன்றத்தின் உத்தரவை மீண்டும் மீறினால் சிறையில் அடைக்க நேரிடும் என டிரம்பை நீதிபதி எச்சரித்துள்ளார்.

# பலஸ்தீன ஆதரவு பல்கலை போராட்டக்காரர்கள் கலைப்பு



கொலம்பிய பல்கலைக்கழகத்தில் முகாமிட்டிருந்த பலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் பலரை கைது செய்த நியூயோர்க் பொலிஸார், கடந்த இரண்டு வாரங்களாக இடம்பெற்று வந்த அந்த ஆர்ப்பாட்ட முகாமை கலைத்துள்ளனர்.

அமெரிக்க நேரப்படி கடந்த செவ்வாய்க்கிழமை பல்கலைக்கழக வளாகத்திற்குள் பொலிஸார் நுழைந்ததை அடுத்து மீண்டும் ஆர்ப்பாட்ட முகாம் அமைக்கப்படுவதை தடுக்கும் வகையில் எதிர்வரும் மே 17 ஆம் திகதி வரை பல்கலைக்குள் நிலைகொள்ளும்படி அந்த பல்கலைக்கழக தலைவர் மினோசே ஷபீக் கேட்டுள்ளார்.

இந்நிலையில் வெளியேற்றப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்கலைக்கு வெளியே 'வெட்கம்... வெட்கம்....' மற்றும் 'பலஸ்தீன சுதந்திரம்' என்று கோசம் எழுப்பினர்.

இஸ்ரேலிய இராணுவத்துக்கு ஆதரவளிக்கும் நிறுவனங்களிலிருந்து விலகியிருப்பது, பல்கலைக்கழகத்தின் நிதி விபரங்கள் குறித்து வெளிப்படையாக இருப்பது, போராட்டத்தில் ஈடுபடுவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்குவது ஆகிய நிபந்தனைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்வைத்திருந்தனர்.

காசாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக அமெரிக்காவின் பல பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் கடந்த இரண்டு வாரங்களாக ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் நெடுஞ்சாலை இடிந்ததில் 19 பேர் பலி

தென் சீனாவின் குவாங்டொன் மாகாணத்தில் நெடுஞ்சாலை ஒன்று இடிந்து விழுந்த விபத்தில் குறைந்தது 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

மியுசு நகர் மற்றும் டபு பகுதிக்கு இடையிலான ஏ12 நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலையில் 58 அடி நீளத்திற்கு பள்ளம் ஒன்று ஏற்பட்டதில் 18 வாகனங்களில் பல டஜன் பேர் அதில் சிக்கிக் கொண்டதாக அரச தொலைக்காட்சியான சி.சி.டி.வி. குறிப்பிட்டுள்ளது.

இதில் 30 பேர் மருத்துவமனையில் அவசர பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அவர்கள் ஆபத்தான நிலையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்கள் விழுந்த அந்த இருண்ட பள்ளத்தில் இருந்து தீப்பிழம்புகள் மற்றும் புகை வெளிவரும் சமூக ஊடக காட்சிகளை உள்ளூர் செய்திப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.



இந்த பள்ளம் ஏற்படுவதற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை. குவாங்டொன் மாகாணத்தில் அண்மைய வாரங்களில் கடும் மழை, வெள்ளம் மற்றும் புயல் தாக்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 2ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.